பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

உங்கள் நிறுவனங்களுக்கு
திறமையான பணியாளர்களை
குறுகிய காலத்தில்
பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
Fb : winstar job bank
021 320 2789
c/400

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 08, திங்கட்கிழமை 24.07.2017 | கதிர் 260

# இளஞ்செழியன் இலக்கு அல்லர்!

## பொலிஸ் தரப்பில் தகவல்



**யாழ்ப்பாணம், ஜூலை 24**

**யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டார். இன்னொரு மெய்ப்பாதுகாவலர் காயமடைந்தார். எனினும், இந்தத் தாக்குதல் சம்பவம் நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட ஒன்றல்ல எனப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர இந்தத் தகவலைக் கொழும்பில் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்டதல்ல என்பதை யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

பக்கம் 18 »



## மெய்க்காவலரின் மனைவி முன் விம்மி அழுதார் இளஞ்செழியன்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நேற்றுமுன்தினம் நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தால் கொல்லப்பட்டதனது மெய்க்காவலர் ஹேமச்சந்திரவின் பூதவுடலைப் பெற்றுக் கொள்வதற்காக நேற்று யாழ். ஆஸ்பத்யின் பிரேத அறையை நோக்கி அவரது மனைவி வந்து கொண்டிருந்த போது, அவரை பிரேத அறையின் வாசலில் எதிர் கொண்ட

பக்கம் 18 »

## என்னைப் பாதுகாப்பதற்கு தன்னைத் தியாகம் செய்தார்

### மெய்க்காவலர் குறித்து இளஞ்செழியன்

“என்னைப் பாதுகாப்பதற்கு துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்களுடன் சண்டையிட்டுத்தனது உயிரைத் தியாகம் செய்தார் என் மெய்ப்பாதுகாவலர்”– என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனாவைத்தியசாலைக்கு நேற்று சென்

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்



என்னமோ நடக்குது....
ஒண்டுமே புரியலை...

## சூத்திரதாரி முன்னாள் போராளியாம் கொலை வழக்கிலும் சிக்கியுள்ளவர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூரில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்க்காவலரின் துப்பாக்கியைப் பறித்து அவர் மீதே சுட்டு அவரைக் கொன்றமையுடன் மற்றையமெய்க்காவலரைப் படுகாயப்படுத்திய நபரைப் பொலிஸார் அடையாளம் கண்டிருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது. பொலிஸார் அவரைத் தேடி வருகின்றனர்.

அவரின் பெயர் செல்வராசா ஜெயந்தன் (வயது -39). நல்லூரைச் சேர்ந்தவர். இவர் ஒரு முன்னாள் போராளி. 1996 முதல் 1999 வரை தமிழீழ விடு

பக்கம் 18 »

## கொல்லப்பட்ட சார்ஜண்ட்டுக்கு சப். இன்ஸ்பெக்டர் பதவி உயர்வு

### சிலாபத்தில் இறுதிக் கிரியைகள்



யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட சார்ஜண்ட் ஹேமச்சந்திரவுக்கு (வயது – 51) மரணத்தின் பின்னரான பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவர் பொலிஸ் சார்ஜண்ட் நிலையிலிருந்து அடுத்த தரமான சப் –

பக்கம் 18 »

## சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு; தனியார் பேருந்துச் சேவையும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூரில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர்கள்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு கண்டனம் தெரிவித்து இன்று வடக்குசட்டத்தரணிகளும் தனியார் போக்குவரத் துறையினரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக் கையில் –

இந்தத்துப்பாக்கிசூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய

பக்கம் 18 »

## தாக்குதலாளி பயன்படுத்திய மோ.சைக்கிள் நேற்று மீட்பு



யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தப்பிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் அரியாலைப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி மோட்டார் சைக்கிள் வீதி

பக்கம் 18 »

## நீதிபதி இளஞ்செழியனுக்கு ஆறுதல் சொன்னார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஜூலை 24

நேற்றுமுன்தினம் நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் சுடப்பட்டமை தொடர்பில், நேற்று நீதிபதியைத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன, மேற்படி சம்பவத்துக்குத்

பக்கம் 18 »

## பொலிஸ் மீதான தாக்குதல் ஜனாதிபதி, பிரதமர் கண்டனம்

### குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

நல்லூர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலரான சார்ஜண்ட் ஹேமச்சந்திர கொல்லப்பட்டமைக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பக்கம் 18 »

# சம்பந்தன் - விக்கி 3 மணி நேரம் பேச்சு

### தமிழ்க் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களுடன் விரைவில் கூடி ஆராயும் வரை விடயங்களைத் தள்ளிப்போடவும் முடிவு



**கொழும்பு, ஜூலை 24**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுக்குமிடையில் நேற்றுக் காலை 10.30 மணி முதல் 1.30 மணிவரை சுமார் மூன்று மணி நேரம் பேச்சுகள் இடம்பெற்றன.**

**தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பங்காளிகளின் தலைவர்களுடன் விரைவில் கூடிப் பேசி முடிவெடுக்கும் வரை சர்ச்சைக்குரிய விடயங்களைத் தள்ளிப் போட இருவரும் தீர்மானித்தார்கள்.**

பக்கம் 18 »

# நீதிபதி மீதான தாக்குதல்; கண்டிக்கிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் வன்மையான கண்டனத்துக்குரியது என புளொட் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நீதிபதி இளஞ்செழியன் மிக நீண்ட காலமாக எனக்கு நன்கு பரீச்சயமானவர். அவர் வவுனியாவில் இருந்த காலத்தில், அதி உச்ச யுத்தகாலமாக இருந்த போதிலும் மிகத்துணிவாகவும், நேர்மையாகவும் தன்னுடைய நீதிச் சேவையை ஆற்றிவந்ததை நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

எந்தவிதமான அரசியல் கலப்பும் பக்கச்சார்பும் இன்றி மிகவும் நேர்மையான முறையிலே அவர் செயற்பட்டு வந்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்திலே மிகவும் பாரதூரமான, உயிர் அச்சுறுத்தல்மிக்க வழக்குகள் பலவற்றை அவர் நேர்மையாக கையாண்டிருக்கின்றார்.

இத்தகைய துணிவும் நேர்மையுமுள்ள நீதிபதி இளஞ்செழியன், எங்களுடைய பகுதிக்கு இன்று மிகவும் தேவையான நீதியை வழங்குபவராகவும், நீதியைப் பாதுகாப்பவராகவும் பார்க்கப்படுகின்றார்.



இன்று குற்றச்செயல்கள் மற்றும் வன்முறைகள் அதிகமாக இருக்கின்ற எங்களுடைய பகுதியிலே இப்படியான ஒரு நேர்மையான, பக்கச்சார்பற்ற ஒரு நீதிபதியின் சேவை மிகவும் அவசியமாகும்.

குற்றச் செயல்கள் தொடராமல் பார்ப்பது பாதுகாப்புத் தரப்பினருடைய கடமையாகும். இதை அவர்கள் செவ்வனே செய்யவேண்டுமென்று நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

இவர்மீதான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தச் சம்பவத்தில் கொலையுண்ட சார்ஜண்ட் ஹேமசந்திரவின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

# நீதிபதி இளஞ்செழியனின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் - விந்தன்

மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் யாழ்.குடாநாட்டை குற்றங்கள் அற்ற பிராந்தியமாக மாற்ற முயற்சித்தார். அவர் பாதுகாக்கப்பட்டு அவரது சேவையின் நலன்களை மக்கள் அனுபவிப்பதற்கு ஏற்ற சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் வருகைக்குப் பின்னர் குடாநாட்டில் குற்றமிழைக்க நினைப்பவர்களிடம் சட்டம் தங்களைத் தண்டிக்கும் என்ற அச்சம் நிலவியது.

யுத்தத்திற்குப் பின்னர் வடக்கில் குறிப்பாக பாலியல் வல்லுறவுகள், வல்லுறவுக்கான முயற்சிகள், போதைவஸ்துப் பாவனை, போதைப் பொருள் கடத்தல், கொலைக்குற்றங்கள், கொள்ளைகள், வாள் வெட்டுச் சம்பவங்கள் என நடந்தேறி வருகின்றன. இவை ஒரு சமூகத்தின் அகக்கூறுகளை சிதைக்கக் கூடியவிடயமாக வடிவமைத்தே சமூக விரோதிகளிடம் கையளிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

அடிப்படையில் இந்தக் குற்றங்கள் எங்களுடைய பண்பாடுமல்ல. வழிவந்த இயல்புகளுமல்ல. எனினும், போர்க்காலத்தில் குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாத கலாசாரம் குற்றமிழைப் போருக்குத் தைரியத்தைக் கொடுத்துள்ளது.

இதனைமாற்றும் வகையில் நீதிபதி இளஞ்செழியனின் தீர்ப்புக்கள் அமைந்துள்ளன.

ஓர் இனத்தை, அவர்களது அடிப்படைகளை சிதைத்து இவர்களது இருப்பை இல்லாதொழிக்கும் முயற்சிகளின் கட்டம் கட்டமான நடவடிக்கைகளாகவே நடைபெறும் குற்றங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

பூர்வீக இனம் ஒன்று அரசியல் அதிகாரம் இன்றித் தவிக்கின்றஇப்பொழுதில் அவர்களது நடத்தைகளை மானிட ஒழுக்க விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டதாக மாற்றுவது எமது மக்களின் இருப்பையே அழித்தொழிக்கும் வேலைத்திட்டமாகும்.

இதனை ஆயுதங்களைப் பயன்படுத்தாது கொலைகளைப் புரியாது சர்வதேச மனித உரிமைக் கண்டனங்களைச் சம்பாதிக்காது தனியே ஒழுக்கமற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதன் வாயிலாக செய்து முடிக்க இயலும்.

இவ்வாறானதோர் கைங்காரியம், குடாநாட்டில் உள்ள சில இளைஞர்களை பயன்படுத்தி அவர்களுக்கு மூளைச் சலவை செய்து சலுகையளித்து மேற்கொள்ளப்படுவதாகவே பார்க்கமுடிகிறது.

இந்த நிலையில், சட்டம் ஒழுங்கை வடிவமைக்கப் பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது. அத்தேவையையே மேல் நீதிமன்றநீதிபதி இளஞ்செழியன் ஆற்றிவருகின்றார்.

இந்த நிலையில் துணிச்சலான ஒரு நீதிபதியைத் தீர்த்துக் கட்டுவதன் மூலம் நீதித்துறையின் சுயாதீனத்தை அச்சுறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.



நாட்டில் நீதிபதிகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு நீதித்துறையின் சுயாதீனமான தீர்ப்புகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் பற்றிவலுவான கோரிக்கைகள் நிலவும் இச்சூழ்நிலையில் இச் சந்தர்ப்பத்தை அரசியல் ரீதியில் கையாளுவதற்கு தென்னிலங்கை சக்திகளைப் பயன்படுத்தக்கூடாது.

குற்றவாளிகளையும் அதன் பின்னாலுள்ள சக்திகளையும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்புள்ள பொலிஸ்திணைக்களம்விரைந்து கைது செய்யவேண்டும்.

மேலும், மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு, நீதிச்சேவை ஆணைக்குழு ஆகியன தாமதமின்றி எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

# வடக்கின் துப்பாக்கிச் சூடுகள் குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். கவலை, கண்டனம்!

கொழும்பு, ஜூலை 24

அண்மைய காலங்களில் வடமாகாணத்தில் நடைபெற்று வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி தமது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த கட்சியின்செயலாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

நல்லாட்சி அரசு தேசிய அரசு என்று சொல்லக்கூடிய மைத்திரி-ரணில் கூட்டு அரசு உருவாவதற்கு எத்தகைய நிபந்தனைகளையும் விதிக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்தது.

ஆனால், தற்பொழுது நடைபெறுகின்ற விடயங்களை அவதானிக்கையில் தீட்டிய மரத்தையே பதம் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.

யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில், இதுவரை காலமும் அமைதிப்பூங்காவாகத் திகழ்ந்துவரும் வட மாகாணத்தில் அண்மைய நாள்களில் இடம்பெறும் நடவடிக்கைகள் கவலையளிப்பதாக உள்ளது. இந்த சம்பவங்கள் கண்டனத்திற்குரியவை.

பல்கலைக்கழக மாணவர்கள்மீது நடைபெற்ற துப்பாக்கிச்சூடு, பளைப் பிரதேசத்தில் மணல்ஏற்றிவந்த வாகனம் நிறுத்தாமல் சென்றதற்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு, வடமராட்சியில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இதேவேளை, அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போன்று கடந்த சனிக்கிழமை மாலை மக்கள் நடமாட்டம் மிக்க நல்லூர் ஆலய சூழலில் பொதுமக்களின் கண்முன்னால் யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு என்பவை எமக்கு பெரும் அச்சத்தையும், சந்தேகத்தையும் எழுப்பியுள்ளன.

மணல் கொள்ளையர்களையும், சட்டவிரோத போதைவஸ்துக்களை இலங்கைக்குக் கடத்தி விற்பனை செய்துவரும் நிழலுலக மாபியாக்களையும் கண்டறிந்து சட்டத்தின்முன் நிறுத்திதண்டனைபெற்றுத்தர முடியாத அளவிற்குப் பொலிஸார் செயற்படுகின்றனரா? அல்லது அவர்களது கைகள் கட்டப் பட்டுள்ளனவா? என்ற கேள்விகள் எழுகின்றன.

அதேநேரத்தில் வாகனத்தை நிறுத்தாமல் சென்ற காரணத்திற்காக சாதாரண சிவிலியன்கள்மீது துப்பாக்கிச்சூடு நடைபெறுகின்றது.

ஏற்கனவே, அச்சத்தின் பிடியில் சிக்கி நாளாந்தம் ஒவ்வொரு நொடியும் என்ன நடக்குமோ என்ற பயத்துடன் வாழ்க்கையைக் கொண்டு நடத்தும் வடமாகாணத்தின் தலைநகர் யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிச் சூடு இடம்பெறுவதைப் பார்க்கின்றபோது இதன் பின்னணியை உன்னிப்பாக ஆராய வேண்டியுள்ளது.

பத்துப்பேருக்கு ஒரு இராணுவத்தினர், எந்த விதத்திலும் எம்மக்களுடன் தொடர்பு இன்றி செயற்படும் பொலிஸார் ஆகியோர் கடமையாற்றுகின்ற பிரதேசத்தில் இத்தகைய சம்பவங்கள் எவ்வாறு நிகழ்கின் றன?

தமிழ் மக்கள் ஒவ்வொரு வினாடியும் கண்காணிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பது ஐ.நா. உள்ளிட்ட சர்வதேசநாடுகளுக்கும் தெரியும். இத்தகைய சூழலில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றமையானது எம்மை இன்னமும் அடக்கி வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதைத்தவிர வேறு காரணங்கள் இருப் பதாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நீதிபதியை இலக்கு வைத்து தாக்குதல்; வடமாகாண சபையும் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தென்மேற்கு வீதியில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியை வடக்கு மாகாண சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

அத்துடன், நீதிபதி இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொலை முயற்சி எமது நாட்டினதும், யாழ். மாவட்டத்தினதும் நீதித்துறை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே பார்க்கப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வடமாகாண அவைத் தலைவர் சி. வீ .கே. சிவஞானம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நீதிபதி இளஞ்செழியனை காப்பாற்ற முயன்ற அவரது மெய்ப்பாதுகாவலர்கள் மீது மேற்கொள்ளப்பட்டதுப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். மற்றையவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கு வடக்கு மாகாண சபை சார்பில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நீண்ட காலமாக நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலராக இருந்து அவரைக் காப்பாற்றும் பணியிலேயே தமது உயிரை ஆகுதியாக்கிய அந்தப் பொலிஸ் அதிகாரிக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பிரதேசத்திலே சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதில் மிக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் நீதிபதி ஒருவரைக் கொலை செய்து ஏனைய நீதித்துறை சார்ந்தவர்களையும் அச்சுறுத்தி அராஜகத்தை இந்த மண்ணிலே நிலை நிறுத்துவதே இந்தக் கொலை முயற்சியின் நோக்கமாக இருக்கலாம்.

அதிலும், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் ஆரம்பிக்க ஒருவாரமே உள்ள நேரத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை இங்கு நிலவும் அமைதியான சூழலைக் குழப்பும் நோக்கம் கொண்டதாகவே பார்க்கப்படவேண்டும்.

இந்தக் கொலைமுயற்சி மற்றும் கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவது மட்டுமன்றி இந்தச் செயற்பாட்டின் பின்னணியிலுள்ள சூத்திரதாரிகள் யாவரும் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையின் ஊடாகக் கோரப்பட்டுள்ளது.

# மகிந்த ஆட்சியில் காணாமற்போனோருக்கு மைத்திரி அரசு பதில் சொல்லவேண்டும்

## வவுனியாவில் மாவை.சேனாதிராசா வலியுறுத்தல்



வவுனியா, ஜூலை 24

மகிந்த அரசின் காலத்தின் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்களுக்கு பதில் சொல்லவேண்டிய கடப்பாடு மைத்திரி அரசாங்கத்திற்கு இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர், ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரு ஓரங்களில் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்லவேண்டிய கடப்பாடு நல்லாட்சி அரசுக்கும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் இருக்கிறது.

தமதுபிரச்சினைகளுக்குமுடிவு கிடைக்கும் என நம்பியே தமிழ் மக்கள்இந்தஆட்சியைக்கொண்டு வந்தனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பு பொய்யாகிப்போனது. இழந்துபோன உயிர்கள் ஒருபுறம் குறிப்பாக இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் போன்றோரையே தமிழ் மக்கள் கேட்கின்றார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக இந்த அரசு பதில் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விசாரணை நடத்தக் கூடிய ஒரு அலுவலகத்தை அமைக்கும் சட்ட மூலத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார். இது ஒரு முன்னேற்றகரமான செயற்பாடு.

இருந்தாலும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் இவர்கள் எவ்வாறு விடைதரப் போகிறார்கள். அரசாங்கத்தின் பதிலில் மக்கள் திருப்திப்படுவார்களா? மக்களின் கண்ணீர் துடைக்கப்படுமா? என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கும். - என்றார். (ம-100)

# அரச மருத்துவர்கள் நாளை அடையாள வேலைநிறுத்தம்

## அவசர நோயாளர் சேவைகள் இடம்பெறும்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நாளை செவ்வாய்க்கிழமை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

மருத்துவ மாணவர்களின் தலைவர் ரயன் ஜெயலத்தின் கடத்தல் முயற்சியைக் கண்டித்தும், லஹிரு உட்பட கைது செய்யப்பட்டுள்ள ஏனைய மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

நேற்றுக் கூடிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய சங்க கூட்டத்தில் ஒருமனதாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நாளை காலை 8 மணியில் இருந்து இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, நாளையதினம் சைட்டம் எதிர்ப்பு மக்கள் அரண் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நடைபவனியும் அதனைத் தொடர்ந்து உச்சி மாநாடும் கொழும்பில் நடைபெறும்.

எனினும் தெல்லிப்பளை புற்று நோய் வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகள் அனைத்திலும் அவசர நோயாளர் சேவைகள் இடம்பெறும் எனவும், டெங்கு நோயாளிகளுக்குரிய சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலை, வில்லூன்றியில் வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆடி அமாவாசை விரத தினமான நேற்று கீரிமலையிலும் வில்லூன்றியிலும் உள்ள புனித தீர்த்தத்தில் பிதிர்க்கடன் வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆடி அமாவாசையை முன்னிட்டு நேற்று அதிகாலை தொடக்கம் கீரிமலைக் கடற்கரையில் விஷேட வழிபாடுகள் இடம்பெற்றன. அங்கு குழுமிய ஆயிரக்கணக்கான பக்தர்கள் இறந்த தமது தந்தையரை நினைந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.


கண்டகி தீர்த்தத்தில் நீராடிய பின் அங்கு இடம்பெற்ற வழிபாடுகளில் அவர்கள் பங்கெடுத்தனர்.

இதேவேளை, வில்லூன்றிவிநாயகர் ஆலயத்ததிலும் நேற்று அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகள் என்பன இடம்பெற்றன. பின்னர் விநாயகப் பெருமான் பக்தர்கள் புடை சூழ வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையை நோக்கி ஊர்வலமாகச் சென்றடைந்தார்.

அதனைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் வில்லூன்றிப் புனித தீர்த்தவாவியில் விநாயகப் பெருமான் தீர்த்தமாடியதைத் தொடர்ந்து இறந்த தம் தந்தையாரை நினைந்து நூற்றுக் கணக்கானோர் அமாவாசை தீர்த்த சங்கற்பம் மேற்கொண்டு பிதிர்த் தர்ப்பணங்கள் செய்ததுடன், வில்லூன்றிப் புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடினர். (ம)

# பொன்னாலை பற்றைக் காடு நேற்றுத் தீப்பற்றி எரிந்தது

## நூற்றுக்கணக்கான பனைகள் நாசம்





சுழிபுரம், ஜூலை 24

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு நேரே பின்புறமாக, பெரியவர் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள பற்றைக் காட்டுக்கு நேற்று சில விஷமிகள் தீமூட்டியதால் அது எரிந்து நாசமானது. இந்த தீயினால் நூற்றுக் கணக்கான பனை மரங்களும் எரிந்துபோயின.

நேற்று பகல் 1.00 மணியளவில் மேற்படி காடு தீப்பற்றி எரியத்தொடங்கியது. காட்டின் பெரும் பகுதி எரிந்து அழிந்த நிலையில் அது தொடர்பாக கேள்வியுற்று அங்கு சென்ற பொன்னாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அது குறித்து வலி. மேற்கு பிரதேச செயலாளர் மற்றும் உள்ளூர் உத்தியோகத்தர்களுக்கும் தகவல் கொடுத்தார்.

அதையடுத்து அங்கு சென்ற பொன்னாலை சமுர்த்தி உத்தியோகத்தர்ச.சுகந்தன்மேற்கொண்ட முயற்சியால்பிரதேசபொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இணைந்துதீ அணைக்கப்பட்டது. இதனிடையேவலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளரும் உத்தியோகத்தரும் நீர்ப் பவு ஸர் சகிதம் அந்த இடத்திற்கு விரைந்து நிலமைகளைக் கண்காணித்தனர்.

இதேவேளை, காடு எரிந்த போது அதன் அருகே உவர் நீர்த் தடுப்பணை அமைக்கும் பணியில் அதன் ஒப்பந்தகாரர் மற்றும் பணியாளர்களும் நின்ற போதிலும், அவர்கள் அதை அணைப்பதற்கு எந்தவித முயற்சியும் எடுத்திருக்கவில்லை.

காடு தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தபோதிலும் அவர்கள் அது தொடர்பாக எந்தவித கரிசனையும் இன்றி தமது பணியை மேற்கொண்டமை தொடர்பாக விசனம் வெளியிடப்பட்டது. (ம)

# மகிந்த ராஜபக்ஷவும் கோத்தாபயவுமே காணாமற்போதலுக்கு காரணமானவர்கள்

## அவர்கள் சுதந்திரமாகச் சுற்றுகிறார்கள் என்கிறார் சிறிதரன் எம்.பி.



வவுனியா, ஜூலை 24

'தமிழ் மக்கள் காணாமற் போவதற்கு காரணமாக இருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் இந்தநாட்டிலே சுதந்திரமாக இருக்கின்றார்கள். அவர்களுடன் எம்மவர்கள் கைகோர்த்துக் கொண்டு திரிகின்றனர்'

இவ்வாறு, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

வவுனியா கனகராயன்குளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஈழப்புரட்சி அமைப்பின் ஈழ விடுதலைக்காய் உயிர் நீத்தவர்களின் நினைவஞ்சலியும் மரம் நடுகையும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறுதி யுத்தத்தின் போது ஈழப்புரட்சி அமைப்பின் தலைவர் பாலகுமாரும் அவருடைய மகன் சூரிய தேவனை சுற்றி இராணுவ சீருடையுடன் சுற்றிவர இராணுவம் இருக்கின்ற படத்தினை சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகங்கள் பிரசுரித்திருந்தன.

அத்துடன் சர்வதேச வானொலியைச் சேர்ந்த ஹரிசனும் இப்படத்தினைப் பிரசுரித்து சரணடைந்தவர்கள் எங்கே என்ற கேள்வியினை கேட்டிருந்தார். நானும் பலமுறை நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக கேள்வியெழுப்பியுள்ளேன்.

ஓர் இயக்கத்தின் தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் தேசிய தலைவருமான வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் இணைந்து செயற்பட்ட காரணத்திற்காக அவர் சரணடைந்த பின்னர் காணாமற்போயிருக்கின்றார். அத்துடன் அரசியல் துறை துணை பொறுப் பாளர், விளையாட்டுத்துறை பொறுப்பாளர் என பல போராளிகள் தனியாகவும் குடும்பமாகவும் சரணடைந்தனர்.

சிலரை மனைவி அல்லது தாய் தந்தையர் நேரடியாகக் கையளித்தனர். அந்தக் கால கட்டத்திலே அரச பயங்கரவாதம் புரிந்த மகிந்த ராஜபக்ஷவிடமும் அவருடைய தம்பி கோத்தாபய ராஜபக்ஷவிடமும் இவர்கள் கையளிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்களா, இல்லையா என்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மருதங்கேணி, திருகோணமலையிலும் எங்களுடைய மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் ஜனாதிபதி இப்பொழுது தான் காணாமல் போனவர்களிற்கான அலுவலகம் அமைப்பது தொடர்பாக வர்த்தமானியில் ஒப்பமிட்டுள்ளார்.

அதிலும் வெளிநாட்டு நீதித்துறை சார்ந்தவர்கள், சட்டவல்லுநர்கள், நிபுணர்கள் வருவதற்கு இன்னும் இலங்கை அரசு ஒத்துக்கொள்ளாத நிலையில், ஜனாதிபதி அதில் ஒப்பமிட்டுள்ளார். இவ்வாறு இருக்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கான நீதி எவ்வாறுகிடைக்கும் என்ற கேள்வி எங்களிடம் இருக்கின்றது.

மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு முன் சாட்சியமளிக்கும் போது, ஒரு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து நானூற்று இருபது பேர் காணாமலும் கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள் என்றார். அவ்வாறில்லாவிட்டால் அல்லது அவர்கள் எங்கே போயிருக்கிறார்கள் எனக் கேள்வி எழுப்பினார்.

நான்கு இலட்சத்து இருபதாயிரம் மக்கள் வாழ்ந்த இடத்திலே மூன்று இலட்சம் அளவிலான மக்களே வவுனியாவிற்குள் வந்தார்கள் என்றால் மிகுதி பேருக்கு என்ன நடந்தது? இதனை சகல கணக்குகளுடன் முன்னாள் மன்னார் ஆயர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறான ஒரு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து நானூற்று இருபது பேரையும் காணாமல் ஆக்குவதற்கும், கொன்றொழிப்பதற்கும் அரச பயங்கரவாதம் புரிந்த இனப்படுகொலையாளிகள் மகிந்த ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ இன்றும் சுதந்திரமாக உலாவிக்கொண்டிருக்கிறார்கள். - என்றார். (ம)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கறுப்பு ஜீலை - நினைவழியா நாள்கள்

கறுப்பு ஜீலையின் நினைவழியா நாள்கள் இவை.

ஆடிக்கலவரம் அரங்கேறி 34 ஆண்டுகள் கடந்துவிட்ட சூழலில் அந்த ஆடிக் கலவர வாரம் நம்மைக் கடந்து செல்கின்றது.

இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் தமிழரின் பாரம்பரிய தாயகபூமியில் - சுதந்திரமாக வாழும் உரிமை கேட்டு மன்றாடிய தமிழர்கள் மீது பௌத்த, சிங்களப் பேரினவாதக் காடையர்கள் இனப்படுகொலை எனும் இனவழிப்பை ஏவிவிட்ட கொடூரத்தின் 34 ஆம் ஆண்டு நினைவை மனதில் கொள்ளும் காலமிது.

பேரினவாதக் கொடூரத்தின் கோரத் தாண்டவத்தையும், ஊழிக் கூத்தாக அரங்கேறிய இனக்கலவரத்தின் குரூரத்தையும் தாங்க முடியாது ஈழத் தமிழினம் துவண்டு போன வரலாற்றுச் சுவட்டின் ஞாபகார்த்த சமயம் இதுவே.

ஆயுதம் தரித்த இரண்டு போராட்டத் தரப்புகளுக்கு இடையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வெடித்த சமரை, அந்தச் சமர் படுதோல்வியின் காரணமாக, இனவாதக் கலவரமாக, எண்ணிக்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள் மீது எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான தென்னிலங்கை பௌத்த, சிங்களவர்கள் திசை திருப்பிவிட்ட சரித்திரத் தவறை சுட்டி நிற்கும் சமயமும் இதுதான்.

1983 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 23 ஆம் நாள் முன்னிரவு திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலும் அதைத் தொடர்ந்த அதிரடியும் ஒரே சமயத்தில் 13 இராணுவச் சிப்பாய்களின் உயிர்களைக் காவு கொண்டன.

பின்னாளில் கட்டவிழவிருந்த துல்லியமான, இம்மியும் பிசகாத புலிகளின் போரியல் தேர்ச்சியின் நுட்பத்தை முற்கூட்டியே பறைசாற்றும் முதல் தாக்குதலாக அமைந்தது அது.

ஆயுதப் போராளிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இலங்கை அரசுப் படைகள், அத்தாக்குதலுக்கு பழிவாங்கும் சீற்றச் சந்நதத்தை அடுத்த நாள் திருநெல்வேலியிலும் கந்தர்மடத்திலும் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விட்டன. அறுபது தமிழ்ப் பொதுமக்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆனால், அதைத் தொடர்ந்து கொழும்பிலும், பிற சிங்கள நகரங்களிலும் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரம் இலங்கை வரலாற்றில் மிக மோசமானதாக - மனித இரத்தம் பெருக்கெடுத்தோடிய கோரமாக - பதிவாயிற்று.

தமிழர்களைப் படுகொலை செய்வதும், அவர்களின் சொத்துக்களைச் சூறையாடுவதும், தீயிட்டு எரிப்பதுமாக இரத்தப் பிரளயம், தடுப்பார், கேட்பாரின்றி நாள் கணக்கில் தொடர்ந்தது. தமிழர் மரணமும், தமிழர்களின் சொத்தழிப்பும் பெருங்கொடூரமாக எல்லை மீறிக் கட்டவிழ்ந்தன.

பாதுகாப்பு ஏதுமற்ற நிலையில், சுமார் மூவாயிரம் தமிழர்கள் காட்டுமிராண்டித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள். பல தமிழர்கள் சிங்களக் காடையர் கும்பல்களால் கண்டதுண்டமாக வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள். பல தமிழ்க் குடும்பங்கள் உயிரோடும் சொத்துகளோடும் சேர்த்து எரிக்கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான பல்லாயிரம் வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள், கைத்தொழில் வளங்கள், சினிமா நிலையங்கள், எரிபொருள் மையங்கள் என அனைத்தும் எரித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. பல்லாயிரம் வாகனங்கள் சாம்பராயின. தெற்கில் சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்கள் இரவோடு இரவாக வீடு வாசல்களை இழந்து ஏதிலிகளானார்கள்.

இது, கண்மூடித்தனமாக வெடித்த கலவரமல்ல. தாக்குதல் நடத்தியவர்கள் தறிகெட்டு - எல்லை மீறி - வன்முறை புரிந்த கும்பல்கள் அல்லர். இவை எல்லாவற்றையும் தாண்டி, கலவரம் என்ற பெயரில் நன்கு திட்டமிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு, கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைக் கொடூரமாக இதனை அவதானிகள் நோக்கினர்.

இந்த ஜீலைக் கலவர சமயத்தில் ஈழத் தமிழரின் வாழ்வில் மற்றொரு கறைபடிந்த சம்பவமும் அரங்கேறியது. 1983 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 25 ஆம் நாளன்றும், அதற்கு இரண்டு நாள் கழித்தும், வெலிக்கடைச் சிறைக்குள் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராளிகள் கொன்றொழிக்கப்பட்டனர்.

சிறை அதிகாரிகளுடனும், சிறைக் காவலர்களுடனும் கூட்டுச் சேர்ந்த சிங்களக் கைதிகள், சிறைக் கூண்டுகளைத் தாக்கி, அழித்து, உள்ளே நுழைந்து தமிழ்க் கைதிகளைக் கண்டதுண்டமாக வெட்டி, கண்களைக் கொடூரமாகக் குத்திப் பிடுங்கிக் குதறி, கோரமாகக் கொன்றொழித்தனர்.

தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் ரெலோ அமைப்பின் பிதாமகர்களாகவும் ஒப்பற்ற போராளிகளாகவும் மதிக்கப்பட்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோர், காந்தீய அமைப்பை இலங்கையில் ஸ்தாபித்த கலாநிதி ராஜசுந்தரம் உட்பட 54 கைதிகள் இவ்வாறு பிய்த்து உதறப்பட்டுக் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழரின் தேசிய ஆன்மாவில் நீங்காத வடுவாகப் பதிந்த இந்த ஆடிக்கலவரம் - கறுப்பு ஜீலை - காருண்ய மகான் புத்தரின் புண்ணிய பூமியில் மனிதத்துவமற்ற மிருகத்தனமான கொடுமைகள் சர்வ சாதாரணமாக அரங்கேறுகின்றன என்ற உண்மையையும் உலகுக்கு உணர்த்தி நிற்கத் தவறவில்லை.

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வவுனியா நகரில் கவனயீர்ப்பு!








வவுனியா, ஜூலை 24

வவுனியாவில் போராட்டத்தை மேற்கொண்டு வரும் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்ந்தும் சுழற்சி முறையில் நேற்று 150 ஆவது நாளாக தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில், நேற்று தமக்கு நீதி கோரி வவுனியா கந்தசுவாமி ஆலய முன்றிலிலிருந்து கவனவீர்ப்புப் பேரணியொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

முற்பகல் 11.30 மணியளவில் வவுனியா கந்தசுவாமி கோவிலில் தேங்காய் உடைத்து கற்பூரம் காட்டி வழிபாடு செய்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கந்தசுவாமி கோவில் முன்றிலில் இருந்து நடைபவனியாக மணிக்கூட்டுக் கோபுரத்தை வந்தடைந்து அங்கிருந்து அவர்கள் போராட்ட இடத்தை சென்றடைந்தனர்.

நடைபவனியின்போது இரண்டு பிள்ளைகளை பறிகொடுத்த தாயொருவர் வீதியில் உருண்டு கதறி அழுத சம்பவம் அனைவரையும் கவலையில் ஆழ்த்தியது. (க-100)

# வவுனியாவில் பொலிஸ் நடமாடும் சேவை





வவுனியா, ஜூலை 24

வவுனியா பொலிஸாரினால் பொலிஸ் நடமாடும் சேவை நேற்றுமுற்பகல் 10 மணியளவில் காத்தார் சின்னக்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள அண்ணா நகர் கிராமத்தில் கோவில் பிரார்த்தனைகளின் பின்னர் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார இந்த நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இதன் போது வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சோம ரத்ன விஜயமுனி, பிரதேசத்தின் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத் தலைவர் கே.ராஜலிங்கம், கிராம சேவகர்கள், மதத் தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும்இந்நிகழ்வில்கலந்துகொண்டனர்.

இந்தநடமாடும்சேவை நிலையத்தின் செயற்பாடுகள் நேற்றுத் தொடக் கம் அடுத்த மாதம் 23 ஆம் திகதி வரை சுமார் ஒரு மாத காலம் செயற்படவுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.





இதன் மூலம் பிரதேசத்தின் புத்திஜீவிகள் மற்றும் பொது மக்களால் முன்வைக்கப்படும் பிரதேசத் தின் அபிவிருத்திப்பணிகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக அடையாளங் காணப்பட்டுஅவற்றை நிறைவேற்றி முடிப்பதற்கு வழிகாட்டியாகச் செயற்படுதல், மக்களின் முறைப்பாடுகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்தல், சிரமதானம், வடிகால் அமைத்தல், துப்புரவு செய்தல், வீதி அமைத்தல் போன்ற பல்வேறு பொது மக்கள் நலன்சார்ந்த பணிகளை முன்னெடுக்கவுள்ளோம் என நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், சிறுநீரக பாதிப்புக்கு உள்ளான கமலநாதன் என்பவரது குடும்பத்திற்கு வீடு கட்டுவதற்காக அடிக்கல் நட்டு வைக்கப்பட்டதுடன், ஒரு மாத கால முடிவுக்குள் வீடு கட்டி கொடுப்பதாக பொலிஸார் உறுதியளித்துள்ளனர்.

நோயால் பாதிக்கப் பட்டு நடக்க முடியாதுள்ள பெண் ஒருவருக்கு முச்சக் கர நாற்காலியும் வழங்கப்பட்டது.

அத்துடன், பாடசாலை மாணவர்களுக்கு பரிசுப் பொருள்களும், கண் பார்வை குறைவுற்றோருக்கான கண்ணாடி களும் வழங்கப்பட்டன. (க-100)

## கண்களை பராமரித்திடுவோம்



கர்ப்பிணிப் பெண்களுக்கு முதல் மூன்று மாதங்களுக்குள் ருபெல்லா (ஜேர்மன் சின்னமுத்து) நோய் ஏற்படின், அது குழந்தையின் பார்வையைப் பறித்துவிடும் ருபெல்லா ஊசியைத் தவறாது ஏற்றுவதன் மூலம் இதனைத் தவிர்க்க முடியும்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

25.07.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : ஆயிலியம் மு.ப. 9.19 வரை
திதி : துதியை பி.ப. 1.05 வரை
சுபநேரம் : 10.32 – 12.02வரை
இராகுகாலம் : 03.02 – 04.32 வரை

# யாழ். பல்கலை. முகாமைத்துவ வணிகபீடத்தின் சமகால சர்வதேச ஆராய்ச்சி மாநாடு 25, 26 இல்!

## கிறீன் கிறாஸ் மண்டபத்தில்; 102 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிகப் பீடம் வருடாந்தம் சம கால முகாமைத்துவத்திற்கான சர்வதேச ஆராய்சி மாநாட்டை தொடர்ந்து நான்கு வருடங்களாக நடாத்தி வருகின்றது.

2017 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இம் மாதம் 25ஆம், 26 ஆம் திகதிகளில் – நாளையும் மறுதினமும் – யாழ். நகரில் அமைந்துள்ள கிறீன் கிறாஸ் விடுதியின் மாநாட்டு மண்டபத்தில் 'சவால்களுக்கு எதிராக நிலைத்திருப்புக்கான உறுதிப்பாட்டைதுண்டுதல்' எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் பல்வேறுபட்ட விடயங்க ளைத் தாங்கி வரும் 102 ஆய்வுக் கட்டுரைகள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஆய் வாளர்களால் வாசிக்கப்பட இருக்கின்றன. இவற்றுள் 35 வெளிநாட்டவர்கள் பங்குபற்றுகின்றார்கள் என்பது – குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கான தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியும், பிரதான இணைப்பாளர் கலாநிதி (திருமதி) சிவாணி சண்முகதாஸும் பல்வேறு விரிவுரையாளர்களைக் கொண்ட குழுக்களின் உதவியுடன் ஒழுங்குகளை மேற்கொள்கின்றனர்.

மாநாட்டுக்கான பிரதம விருந்தினராக இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் பி.எஸ்.எம். குணரட்னவும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வுக்கான ஆதார சுருதி உரையை (Key Notes) இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளர் கலாநிதி (திருமதி) சுஜித்தா ஜெகஜீவனும், இந்தியாவிலுள்ள சாயிராம் பொறியியல் கல்லூரியின் முகாமைத்துவ கற்கை நெறியின் பணிப்பாளர் பேராசிரியர் கே.மாறனும் ஆற்றவுள்ளனர்.

102 கட்டுரைகளும் 8 முக்கிய தலைப்புக்களுக்குக் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. 8 தலைப்புக்களையும் சார்ந்த சிறப்பு நிபுணர்களினால் நிகழ்த்தப்படும் சிறப்பு உரைகளைத் தொடர்ந்து அந்தத் தலைப்புக்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்படும்.

மாநாட்டினுடைய தொடக்க நிகழ்வில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் 'சர்வதேச கணக்கியல் மற்றும் வியாபார நிதி' (International Journal of Accounting & Business Finance), 'வியாபாரக் கற்கைகள்' (Journal of Business Studies) ஆகிய இரு ஆய்விதழ்களின் பருவ இதழ்களும் வெளியிடப்படவுள்ளன. முதலாம் நாள் நிறைவில் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் நாள் தொடக்க நிகழ்வாக 'சமூக நிலை மாற்றத்துக்கான செயல் முறையில் பல்கலைக்கழகங்களின் வகிபங்கு' எனும் தலைப்பில் பேராசிரியர் ஜி.கண்ணபிரான் தலைமையில் பேராசிரியர் வி.கேமெந்த குமார், பேராசிரியர் ஜி.மிகுந்தன், பேராசிரியர் ஏ.அற்புதராஜா மற்றும் மருத்துவக் கலாநிதி ஆர்.சுரேந்திரகுமார் ஆகியோரை உள்ளடக்கிய சிரேஷ்ட கல்வியாளர்கள் கலந்துரையாடுவார்கள். மாலை இறுதி நிகழ்வாக ஆய்வாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம் பெறும்.

இந்த ஆய்வு மாநாட்டின் மூலம் எமது சமூகத்தின் தொழில் நிறுவனங்கள் தம்மை நிலைத்திருக்கச் செய்வதற்கான தந்திரோபாய மூலங்களை உரு வாக்குவதோடு, ஒவ்வொரு தொழில் முயற்சிகளுடைய பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவதற்கான வழிமுறைகளைக் கண்டறியவும், நீண்டகால சமூக நன்மைகளை ஏற் படுத்தவும் முடியும் எனப் பல்கலைக்கழக சமூகம் நம்பிக்கை கொண்டுள்ளது.

# மட்டு. ஊடகவியலாளர்கள் மூவரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றனர்

### மட்டு. அரச அதிபரின் முறைப்பாட்டை அடுத்து

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட மூன்று ஊடகவியலாளர்கள் நேற்று மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது. மேற்படி ஊடகவியலாளர்களுக்கு எதிராக மட் டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே இந்த விசாரணை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் இணையத்தளம் ஒன்றில் வெளிவந்த செய்திகளுக்கு எதிராக ஊடகவியலாளர்களான வா.கிருஸ்ணகுமார், செ.நிலாந்தன், ஏ.நிதாகரன் ஆகியோர் மீது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவிக்கையில், அண்மைக் காலமாக மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் செய்திகள் தொடர்பில், மாவட்ட அரச அதிபரால் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். ஒரு அரச அதிகாரி ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கி சர்வாதிகாரப் போக்குடன் செயற்படுவதை ஊடக சமூகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

அரசியல்வாதிகளும் பொது அமைப்புகளும் மட்டக்களப்பு அரச அதிபருக்கு எதிராக ஒன்று திரண்டு நிற்கின்ற நிலையில், அது தொடர்பான செய்திகளை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஊடகவியலாளர்களுக்கு உள்ளது. அதனைச் செய்யும்போது ஊடகவியலாளர்களை அச்சுறுத்த முனைவது ஜனநாயக விரோத போக்காகவே கருதப்படும். இந்தச் செயற்பாடுகளை மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளை ஒன்றியம் முன்னெடுக்கவுள்ளது. – எனக் கூறினர். (ம)

# கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹரா இன்று!

கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹராவின் ஆரம்பத்தை முன்னிட்டு சம்பிரதாய வழிபாட்டு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து முதலாவது கும்பல் பெரஹராவின் வீதி உலா எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ளதுடன், ஐந்து நாள்களுக்கு கும்பல் பெரஹரா இடம்பெறும்.

எதிர்வரும் இரண்டாம் திகதி வரையில் இதன் வீதி உலா நடைபெறும்.

இதன் தொடர்ச்சியாக முதலாவது ரந்தோலி பெரஹராவின் வீதி உலா ஆகஸ்ட் மூன்றாம் திகதி இடம் பெறவுள்ளது.

இறுதி ரந்தோலி பெரஹரா ஏழாம் திகதி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அன்றையதினம் இரவு கெட்டம்பேயில் நீர் வெட்டு நிகழ்வு இடம்பெறும்.

பின்னர் பகலில் பெரஹரவின் வீதி உலாவுடன் கண்டி தலதா மாளிகையின் பெரஹரா நிகழ்வுகள் நிறைவு பெறும். இதனை குறிக்கும் சம்பிரதாய நிகழ்வின்போது ஜனாதிபதியிடம் இது தொடர்பான ஆவணத்தை தியவதன நிலமே கையளிப்பார். (க)

# நல்லாட்சி அரசு எதுவரையில்? ஐ.தே.க.-சு.க. முரண்பாட்டில்!

நல்லாட்சி அரசாங்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதா, இல்லையா, என்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுக்கிடையில் இருவேறு கருத்துக்கள் காணப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, அரசாங்கத்தின் முழுமையான காலத்தை 2020 வரை இரு கட்சிகளும் இணைந்து கொண்டு செல்ல வேண்டும் என ஐ.தே.க.வின் பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும், இரு கட்சிகளின் உடன்படிக்கையின்படி, எதிர் வரும் டிசம்பர் 31 வரை இந்த அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியும் என ஐ.ம.சு.மு.யின் செயலாளர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இரு கட்சிகளிலுமுள்ளவர்கள் கருத்து முரண்பாட்டை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியும் தமது கட்சி உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை, நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதான இரு கட்சிகளும் இன்று ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் கூடி ஆராயவுள்ளன என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# படைத்தளபதிகள் கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்த மல்வத்து பீடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 24

போரின் போது படைத்தளபதிகள், படைவீரர்கள் மற்றும் தேசிய தலைவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தி அது குறித்து நாட்டுக்கு அறிவிக்க வேண்டுமென மல்வத்து பீடம், அரசிடம் கோரியுள்ளது.

இவ்வாறு மல்வத்து பீடத்தின் துணைப் பீடாதிபதி வண. நியங்கொட விஜித சிறி தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் நினைவு நிகழ்வு கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரின் போது படைத்தளபதிகள், படைவீரர்கள் மற்றும் தேசியத் தலைவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பது பற்றி விசாரணை நடத்தப்படவேண்டும்.

போர் நிறைவடைந்து அது பற்றிப் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு வருகின்றன.

போருக்கு பங்களிப்பு வழங்கிய பலர் இன்று பல்வேறு நெருக்கடிகளை சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளன.

டென்சில் கொப்பேகடுவ போன்ற படைத் தளபதிகள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தி அதனை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என விஜிதசிறி தேரர் கோரியுள்ளார். (க)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் 1,190 இராணுவத்தினர் களத்தில்!

டெங்கு ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆயிரத்து 190 படைவீரர்கள் இணைந்து டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் என அரசு தெரிவித்துள்ளது.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், கண்டி, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் முன்னெடுக்கப்படுகின்றன.

இந் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் புகையிரத நிலையங்கள், வைத்தியசாலைகள், பஸ்தரிப் பிடம், பாடசாலை வளாகங்கள், வியாபார நிலையங்கள், விகாரைகள் மற்றும் பொது நிலையங்கள் என்பன சுத்திகரிக்கப்பட்டன.

அத்துடன், நாட்டில் நிலவும் அசாதாரண நிலைகளின் காரணமாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த டெங்கு ஒழிப்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அரச பணிப்புரைகளுக்கமைய பாதுகாப்பு பதவி நிலை காரியாலய தொடர்பாடலுடன் மேற்கு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் தலைமையில் சில தினங்களுக்கு முன்பு பாதுகாப்புப் படையினரது பங்களிப்புடன் இந்த டெங்கு ஒழிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் துறைமுகம் மூடப்படமாட்டாது!

## அபிவிருத்தி செய்யப்படும் என்கிறார் அமைச்சர் சமரசிங்க

ஒலுவில்,ஜுலை 24

ஒலுவில் துறைமுகம் ஒரு போதும் மூடப்படமாட்டாது. இதனை அபிவிருத்தி செய்து நாட்டுக்கு வருமானம் ஈட்டக் கூடியதாக மாற்றியமைப்பதற்கு நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

-இவ்வாறு துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

துறைமுக அபிவிருத்தி தொடர்பாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஒலுவில் துறைமுகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மா்ஹூம் அஷ்ரபினால் இந்தப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்காகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் ஏற்படுத்தப்பட்ட இந்தத் துறைமுகம் ஒரு போதும் கைவிடப்பட மாட்டாது.

இந்தத் துறைமுகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்



பரிந் துரைக்கமைய விரைவில் அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

இந்தத் துறைமுக பராமரிப்புக்காக மாதம் ஒன்றுக்கு 4 கோடியே 60 லட்சம் ரூபாவரை செலவாகின்றது. துறைமுக நுழைவாயிலில் மூடப்பட்டுள்ள மண்ணை அகழ்வதற்கு 500 கோடி ரூபா தேவைப்படுகின்றது. எவை எப்படி இருந்தாலும் இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதே எமது இலக்காகும்.

இதேவேளை, மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காண்பதற்காக மீன்பிடித் துறைமுகத்தை மீன்பிடி அமைச்சுக்கு கையளிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்தத் துறைமுகத்துக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இது வரை வழங்கப்படாமல் உள்ள நஷ்டஈடுகளை 2 மாத காலத்துக்குள் வழங்குவதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இந்தத் துறைமுகத்தால் ஏற்பட்டுள்ள கடலரிப்பு, மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் துறைமுக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் விரைவில் தீர்வு காணப்படும். -என்றார். (ச)



## அநாதரவான நிலையில் 2 வயது ஆண் குழந்தை மட்டு.கடற்கரையில் மீட்பு!

சுமார் இரண்டு வயது மதிக்கத்தக்க ஆண் குழந்தை ஒன்று மட்டக்களப்பு கடற்கரையில் அநாதரவான நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குழந்தை அநாதரவற்ற நிலையில் கடற்கரை ஓரத்தில் நின்றதை அடுத்து, கிராம மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதனை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குழந்தையை மீட்டு பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்றுள்ளனர்.

மேற்படி குழந்தையை அவரது தந்தையே இவ்வாறு விட்டுச் சென்றுள்ளார் என கடற்கரையில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் குழந்தை தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில், பிரஸ்தாபக் குழந்தையின் புகைப்படத்தை பொலிஸார் வெளியிட்டுள்ளனர். (ச)

## 15 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம்!

### காதலனுக்கு மறியல்!

திருகோணமலை கந்தளாயில் 15 வயதுடைய சிறுமியைக் காதலித்து, துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் 27 வயதுடைய இளைஞன் ஒருவரை, எதிர்வரும் 31 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க உத்தரவிட்டார்.

மேற்படி சந்தேக நபர் அந்தச் சிறுமியைக் காதலித்துள்ளார்.

இந்த நிலையில், சிறுமியைத் தனிமையில் அழைத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி விட்டு, வேறொரு பெண்ணுடன் வெளிநாட்டுக்குச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இதனை அடுத்து, பாதிக்கப்பட்ட சிறுமி கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையிலேயே மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

# திருகோணமலை மாவட்டத்தில் வறட்சி: 27 ஆயிரத்து 646 குடும்பங்கள் பாதிப்பு!

திருகோணமலை, ஜுலை 24

திருகோணமலை மாவட்டத்தில் தற்பொழுது நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக, 27ஆயிரத்து 646 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.


-இவ்வாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

வறட்சி நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த வறட்சியான கால நிலை தொடர்ந்தும் நிலவி வருகிறது. குறிப்பாகக் கிண்ணியா, மூதூர் மற்றும் தோப்பூர், தம்பலகாமம், ஈச்சலம்பற்று, வெருகல், புல்மோட்டை ஆகிய பகுதிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நடுஊற்றுக்குளம், மணியரசங்குளம் ஆகிய கிராமங்கள் முற்றாக நீரின்றிக் காணப்படுகின்றன. இங்குள்ள கிணறு



களில் நீரைப் பெறுவது மிகவும் கடினமாக உள்ளது. இதனால், இந்தப் பிரதேசங்களில் வாழ்பவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கால் நடைகள் தண்ணீர் இன்றி உயிரிழக்கின்ற அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

திருகோணமலையைப் பொறுத்த வரையில் இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான ஜீவனோபாயமாக நெற்செய்கை மற்றும் மீன்பிடி என்பன உள்ளன. இதனால், விவசாயிகள், மீனவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரம் மிக மோசமாக உள்ளது. வயல் நிலங்கள், வீட்டுத் தோட்டப்பயிர்கள் என அனைத்துமே அழிவடைந்துள்ளன. -என்றார். (ச)





மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமப் பகுதிகளில் குழாய்க் கிணற்றைக் கையளித்தல் மற்றும் பாடசாலை சுற்றுமதில் அமைக்க அடிக்கல் நடும் நிகழ்வு என்பன நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, மங்களகம மகா வித்தியாலய சுற்று மதிலுக்கு அடிக்கல் நடல் மற்றும் குழாய்க்கிணற்றை மக்கள் பாவனைக்கு கையளித்தல் போன்ற வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

## பக்மீகம பகுதியில் கைக்குண்டு மீட்பு!

திருகோணமலை பக்மீகம பகுதியில் ஜொனி பட்டா வகைக் கைக்குண்டு ஒன்றை, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கோமரங்கடவெல பொலிஸார் மீட்டனர்.

இந்தப் பகுதியில் உள்ள வீட்டு வளாகம் ஒன்றில் கைக்குண்டு ஒன்று உள்ளது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே, மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கைக்குண்டை நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்கச் செய்யவுள்ளோம் எனக் கோமரங்கடவெல பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# நாட்டு மக்களின் நலனுக்காகவே காணாமற் போனோர் அலுவலகம்!

## பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 24

நாட்டு மக்களின் தேவை மற்றும் நலனுக்காகவே காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்படுகிறது. சர்வதேசத்தின் தேவையை நிறைவேற்றுவதற்கு அல்ல என்று பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

வானொலி நிகழ்ச்சியொன்றில் நேற்றுமுன் தினம் காலை கலந்து கொண்டபோதே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

காணாமற் போனோர் அலுவலகம் மூலம் நாட்டின் அனைத்து மக்களுக்கும் பெருமையுடன் வாழக்கூடிய சூழலை அரசு ஏற்படுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் காணாமற் போனோர் சம்பவங்கள் இடம்பெறாத வகையில் இருப்பதற்கு இவ்வாறான பொறிமுறை ஒன்று தேவை.

இத்தகைய அலுவலகம் ஒன்றை அமைப்பதன் மூலம் படையினருக்கு எதிராக குற்றச்சாட்டை சுமத்துவது அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் போன்றவை எந்த வகையிலும் இடம் பெறாது.

இருப்பினும், காணாமற் போனோர் தொடர்பில் என்ன நடந்தது என்பதை அவர்களது குடும்பங்களுக்கு அறிவித்தல், தேவையான நிவாரணத்தை வழங்குதல் ஆகிய விடயங்கள் இதன் மூலமாக இடம்பெறும் என்று பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோரின் குடும்ப உறுப்பினர்களின் கூட்டமைப்பின் தலைவர் பிரிடோ பெர்னாண்டோ இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கையில்-

காணாமற் போனோர் தொடர்பான சம்பவம் குற்றச் செயலாக ஏற்றுக் கொள்வதை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் எதிர்க்கின்றனர். இவ்வாறு எதிர்ப்பது மீண்டும் இவ்வாறான சம்பவங்களை மேற்கொள்ளும் நோக்கிலா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்-

நாட்டில் நிலவும் முக்கிய பிரச்சினைக்கு இவ்வாறு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் அரசைப் பாராட்ட வேண்டும். இதில் நாம் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில்-

காணாமற் போனோர் தொடர்பான சட்டம் சர்வதேச இணக்கப்பாட்டுக்கு அமைவாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். காணாமற் போனவர்கள் சாதாரண மக்களின் பிள்ளைகள் ஆவார் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இயற்கைப் பசளையின் தரத்திற்கான திருத்தச் சட்டம்

இயற்கைப் பசளையின் புதிய தரத்திற்கான திருத்தச்சட்டமூலத்திற்கு தற்பொழுது பொது மக்களிடமிருந்து இருந்து கருத்துக்களைப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான கருத்துக்களைமுன்வைப்பதற்கான கால அவகாசம் அடுத்த மாதம் 15 ஆம் திகதியாகும். இந்தத் திருத்தச்சட்டமூலம் தொடர்பான தகவல்களை இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் அல்லது அதன் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

நகர திண்மக் கழிவுகளைப் பயன்படுத்தி விவசாயத்துறைக்குத் தேவையான இயற்கைப் பசளையைத் தயாரிக்கும் வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

சம்பந்தப்பட்ட தரப்பினரின் தொழில்நுட்பக் குழுவொன்றின் மூலம் இந்தத் திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அதிர்ந்தது ஜனாதிபதியின் ஆசனம்!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமர்ந்திருந்த ஆசனம் அதிர்ந்து ஆட்டம் கண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதன் போது ஜனாதிபதி மைத்திரி அமர்ந்திருந்த ஆசனம் திடீரென அதிரத் தொடங்கியுள்ளது.

ஆசனம் அதிர்வதாக ஜனாதிபதி ஏனைய அமைச்சர்களிடம் கூறியுள்ளார்.

இது குறித்து ஆராய வேண்டும் என அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

பழைய நாடாளுமன்றுக்கு எதிரில் நிதி நகரம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும், கடற்பகுதியில் மேற்கொண்ட துளையிடும் நடவடிக்கையினால் இவ்வாறு அதிர்வு ஏற்பட்டது எனவும் தெரியவந்துள்ளது.

வேறும் ஓர் முறையைப் பயன்படுத்தி துளையிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சீன நிறுவனத்திற்கு அமைச்சர் சம்பிக்க ரணவக்க பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## டெங்குப் பரிசோதனைக்கு தனியார் நிறுவனங்கள் அதிக கட்டணம் அறவிட்டால் மக்கள் முறையிடலாம்!

கொழும்பு, ஜூலை 24

டெங்குப் பரிசோதனைக்கென அதிக கட்டணம் அறவிடும் தனியார் வைத்திய நிறுவனங்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை மக்கள் முன்வைக்க முடியுமென தனியார் சுகாதார ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தனியார் சுகாதார ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

டெங்கு நோயாளர்களின் முழுமையான இரத்தப் பரிசோதனைக்கென 250 ரூபா மாத்திரமே அறவிடப்பட முடியும்.

இந்தத் தொகைக்கு மேலதிகமாக பணத்தை அறவிடும் நிறுவனங்கள் தொடர்பில் தனியார் சுகாதார ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாட்டை முன்வைக்க முடியுமென ஆணைக்குழு அறிவித்துள்ளது

இதேவேளை டெங்கு நோயாளர்கள் தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளும் இரத்தப் பரிசோதனை தொடர்பான அறிக்கையை இரண்டு மணித்தியாலங்களுக்குள் வழங்காவிடின் சிகிச்சைகளை மேற்கொள்ளுதல் குறித்த அறிக்கை செல்லுபடியற்றதென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வைத்திய நிறுவனங்களில் இரத்தப் பரிசோதனை அறிக்கைகளை வழங்க இரண்டு மணித்தியாலங்களுக்கும் அதிகமாக காலம் எடுப்பது தொடர்பில் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தனியார் வைத்திய நிறுவனங்களில் இரண்டு மணித்தியாலங் களுக்குள் இரத்த பரிசோதனை அறிக்கை கிடைக்காவிடின் அரச வைத்தியசாலைகளுக்கு வருகைதந்து இலவசமான இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளுமாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச வைத்தியசாலைகளில் ஒரு மணித்தியாலத்திற்குள் முழுமையான இரத்தப் பரிசோதனை அறிக்கை வழங்கப்படுவதுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பத்து நிமிடங்களில் இரத்தப் பரிசோதனை அறிக்கை வழங்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 825 கோடி ரூபாவுக்கு அரச காணி விற்பனை மஹிந்தவால் வெளிநாட்டு நிறுவனத்துக்கு!



கொழும்பு, ஜூலை 24

கடந்த ஆட்சியின் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு, 825 கோடி ரூபாவுக்கு அரசகாணிகளை விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது.

இது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று ஆதாரத்துடன் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஷங்கிரிலா ஹோட்டல் நிறுவனத்திற்கு, கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள 2.4361 ஹெக்டெயர் காணி விற்பனைசெய்யப்பட்டுள்ளது.

எனினும் வாடகை அடிப்படையின் கீழ் இந்த காணிகள் வழங்கப்பட்டன என்று கடந்த அரசாங்கத்தினால் தொடர்ந்து கூறப்பட்டு வந்தது.

இலங்கை குடிமக்களுக்கு அனைத்து உரிமையும் கொண்ட அந்தக் காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என உரிமைப்பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய அந்தக் காணியிலுள்ள பெற்றோலியம், நீர் மற்றும் அனைத்து வளங்களும் குறித்த ஹோட்டல் நிறுவனத்திற்குகிடைத்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கையொப்பத்தில் இந்த காணி 825 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## வெளிநாடுகளுக்குச் செல்லும் பணியாளருக்கான புதிய நடைமுறை!

கொழும்பு, ஜூலை 24

2018 ஆம் ஆண்டில் இருந்து வெளிநாடு செல்லும் இலங்கைப் பணியாளர்களுக்கு ஆங்கிலத் திறனைக் கட்டாயப்படுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் இந்தத் தகவலைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பணியாளர்களின் தரத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் மேற் கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளுக்கமைய, தகுதிநிலையை மீறி பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இதற்கு சில வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதிநிதி நிறுவனங்கள் உதவி செய்வதாகத் தெரியவந்துள்ளது.

இந்த நிலைமையை தடுப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 40 நாள்கள் பயிற்சி வழங்குவதையும் கட்டாயப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய தொழிற்சங்கம் உதயம்!



கிளிநொச்சி மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சாரதிகள் மற் றும் நடத்துநர்களை உள்ளடக்கிய புதிய தொழிற்சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில், கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இந் நிகழ்வு நடைபெற்றது. தனியார் போக்குவரத்தில் மாவட்ட ரீதியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வாகவே இந்தத் தொழிற் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தினசரி ராசி பலன் 24.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 09 ஆம் நாள் பிரதமைத்திதி பகல் 12.22 மணி வரை. பின்னர் துவிதியை. நட்சத்திரம்: பூசம் காலை 7.43 மணி வரை. அதன்மேல் ஆயிலியம். மாலை 6.00 மணி வரை. பின்னர் மகம். சித்தயோகம் மாலை 6.00 மணி வரை. பின்னர் அசுபயோகம். ராகுகாலம்: காலை 7.34 மணி முதல் 7.08 மணி வரை. சுபநேரம்: பகல் 12.04 மணி முதல் 1.34 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆடிமாத வளர்பிறை துவிதியை. பிறந்த நட்சத்திர வழிபாடு: ஆயிலியம்.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** சஞ்சலமான நாள். மன அமைதிக் குறைவு ஏற்படும். வர்த்தகர்களுக்கு பொருள் நஷ்டமேற்படும். உத்தியோகத்தர்களுக்கு புதுப்பொறுப்புகள் மூலம் வேலைப்பளு அதிகரிக்கும்.

**ரிஷபம்:** மத்திம பலன்கள் காணப்படும். குடும்பத்தில் ஓரளவு அமைதி காணப்படும். வர்த்தகர்களுக்கு வங்கிகளில் எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தைத் தரும்.

**மிதுனம் :** யோகமான நாள். வர்த்தகர்களுக்கு எதிர் பார்த்ததை விட மேலதிக லாபம் கிடைக்கும். உத்தி யோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் உதவியால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும்.

**கடகம் :** மகிழ்ச்சியான நாள். வருமானம் பெருகும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். இது வரை தடைப்பட்டிருந்த விவாகப் பேச்சுக்கள் கைகூடிவரும். பிரிந்திருந்த நெருங்கிய உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புள்ளது.

**சிம்மம்:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் வேலை தேடி அலைவார்கள்.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். திருமணமாகாதவர்களுக்கு மங்கல கருமம் கைகூடும். அந்நியதேசத் தொடர்புகளும், உதவிகளும் கிட்டும்.

**துலாம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தடை, தாமதங்களின் மேல் காரியசித்தி உண்டாகும். வீண் அலைச்சல்களும், அநாவசியச் செலவுகளும் உண்டாகும். தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைவடையும்.

**விருச்சிகம்:** இன்பமான நாள். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். உத்தியோகத்தில் உயர்வும், கௌரவமும் உண்டாகும். வியாபாரத்தில் லாபம் கிட்டும்.

**தனுசு :** குழப்பமான நாள். மறைமுக எதிரிகளால் பல துன்பங்கள் உண்டாகும். குடும்ப வாழ்க்கையில் மன வேறுபாடுகளும் நிம்மதியின்மையும் உண்டாகும்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. இருப்பிடத்தில் அமைதி குறையும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. நீண்டதூரப் பயணங்களைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** அதிர்ஷ்டமான நாள். குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும். வெளிநாட்டு உறவினரிடமிருந்து விலை உயர்ந்த பரிசுப் பொருள்கள் வந்து சேரும்.

**மீனம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரமும் நல்ல முன்னேற்றமடையும். தொழில் செய்யும் பெண்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும்.

**சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் இன்று நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# இலங்கை வரும் போதைப் பொருள்கள் ஐ.எஸ்.அமைப்பினருக்கு நிதி திரட்டவா?

## பொதுபலசேனாவுக்கு எழுந்துள்ள சந்தேகம்

ஐ.எஸ். அமைப்புக்காக நிதி களைத் திரட்டி உதவும் நோக் கில் இலங்கையில் போதைப் பொருள் கடத்தல் கள்நடைபெறுகின்றனவா என்ற சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொதுபலசேனா தெரிவித்துள்ளது.

ராஜகிரியவிலுள்ள பொது பல சேனா அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந் திப்பிலேயே அந்த அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் டிலந்த விதானகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது வில்பத்து காடு அழிக்கப்படுவது தொடர்பாகவும் அங்கு கொலனிகள் அமைக்கப்படுகின்றமை தொடர் பாகவும் எமக்கு பெரிய சந் தேகம் உள்ளது.

அதாவது கடந்த அரசுடனும் மற்றும் இந்த அரசுடனும் மற்றும் ஒன்றிணைந்த எதிர்க் கட்சியுடனும் இரகசியமாகப் பேச்சுகளை நடத்திவரும் அமைச்சர் ஒருவர் உள்ளிட்ட குழுவொன்றின் செயற்பாடு களைப் பார்க்கும்போது தெளி வாகப் போதைப் பொருள் வர்த் தகம் ஐ.எஸ். ஐ.எஸ் அமைப் புக்காக ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படு கின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பு வளர்ச்சியடைந்த தைப் போன்று ஐ.எஸ். அமைப் புக்கு ஆதரவான இந்தக் குழுவை இலங்கையில் வளரச் செய்வதற்காக அரசில் சகல தரப்பினரும் செயற்படுகின் றனர் என்றே எண்ணுகின் றோம்.

அந்த அமைச்சர் மற்றும் போதைப்பொருள் கடத்தல் குழுவுக்கு எதிராகச் செயற் படுவாராயின் அரசின் இருப் புக்கு பிரச்சினையாகிவிடுமோ என்ற பயம் அரசுக்கு ஏற்பட்டுள் ளது.-என்றார். (எ)

# மாணவர்கள் மீதான அடக்குமுறையை இனிமேலும் அனுமதிக்கவே முடியாது!

## 'சைட்டம்' எதிர்ப்பு அமைப்பின் உறுப்பினர் ஞானந்த தேரர்

கொழும்பு, ஜூலை 24 கொலைகளில் ஈடுபட்ட வர்கள் அரசியல்வாதி சகிதம், கொலைக் குழுக்களுக்கு தலைமை வகித்த நபர்கள் அமைச்சுப் பதவிகளிலும் அமர்ந்துள்ளநிலையேதற்போது நாட் டில் காணப்படுகின்றது என்றுசைட்டம்எதிர்ப்பு அமைப் பின் உறுப்பினரான வண. ஞானந்ததேரர்தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேலும், பல்கலைக்கழக மாணவர்களின் மீதான அடக்கு முறைக்கு எதிராக மக்கள் செயற்பட வேண்டும். தற் போதைய சூழலில் பல்கலைக் கழக மாணவர்களுடன் தொழிற் சங்கங்களும் இணைந்துள்ளன. இதனால் அரசுக்கு அடக்கு முறையைத் தொடர்வதற்கு இனிமேல் அனுமதி அளிக் கப்படமாட்டாது.

இந்த நிலையில், மக்களு டன் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளோம்.-என்றார்.

# உடல் உறுப்புகளைத் தானம் செய்ய மக்கள் விருப்பம் கொள்ள வேண்டும்!

## இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஞானதாசன் தெரிவிப்பு




இலங்கை மக்கள் உடல் உறுப்புகளைத் தானம் செய் வதற்கு முன்வர வேண்டும். இதன்மூலம் இறந்த பின்னரும் பலரை வாழ வைக்கலாம்.

-இவ்வாறு இலங்கையில் முதலாவது இருதய மாற்று சத்திர சிகிச்சையை மேற் கொண்ட இருதய சத்திர சிகிச்சை நிபுணர் கு.ஞான தாசன் தெரிவித்தார்.

கண்டி போதனா வைத்திய சாலையில் கடந்த ஜூலை மாதம் 7 ஆம் திகதி இலங்கை யில் முதல்தடவையாக இருதய மாற்று சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது. இதனை மேற்கொண்ட வைத்திய நிபுணர் கு. ஞானதாசன் யாழ்ப் பாணத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

வீதிவிபத்தில்சிக்கி மூளைச் சாவடைந்த இளைஞர் ஒருவ ரின் இருதயத்தை பெண் ஒரு வருக்கு மாற்றியிருக்கின்றோம். அந்தப் பெண்ணுக்குக் கடந்த 16 நாள்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட் டது. அவர், தற்போது எழுந்து நடமாடும் நிலைக்கு முன் னேற்றம் அடைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேலும் பல இருதய மாற்று சத்திர சிகிச்சைக்கான விண் ணப்பங்கள் மேலும் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால், நிர் வாக மற்றும் சட்டரீதியான சில சிக்கல்கள் காரணமாக செய்ய முடியாமல் உள்ளது. ஆனால், இலங்கையில் இரு தயச் சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட வேண்டிய நிலை யில் பலர் உள்ளார்கள்.

வெளிநாடுகளில் உடல் உறுப்புத் தானம் செய்ய விரும்புபவர்களின் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அடையாள அட்டை போன்ற வற்றில் உடல் உறுப்புத் தானம் செய்ய விரும்புகிறார் என குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால், அவ்வாறான நடை முறை இலங்கையில் இல்லை.

ஆனால், சுகாதார அமைச்சர் அமைச்சரவைப்பத்திரம் ஊடாக அவ்வாறான நடை முறையை இலங்கையில் கொண்டுவருவ தற்கு நடவடிக்கை எடுத்திருக் கின்றார். எனவே உடல் உறுப் புத் தானம் ஊடாக இறந்த பின்னரும் நாம் மற்றவர்களை வாழவைக்கலாம்.

குறிப்பாக இலங்கையில் முதல் தடவையாக இருதய மாற்று சத்திர சிகிச்சைக்காக தனது இருதயத்தை தானம் செய்த இளைஞன், தான் இறந்து 3 பேரை வாழ வைத் திருக்கின்றார். அவர் 5 பேரை வாழ வைத்திருப்பார் ஆனால், தானம் பெறுவதற்கு இருவர் இல்லை. அதனாலேயே இரண்டு உறுப்புக்களைத் தான மாக வழங்க இயலவில்லை. -என்றார். (ச)

# அதிபர், ஆசிரியர் மாநாட்டுக்கு செலவு ரூ.4 கோடி!



வட மாகாண சபையின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கடந்த வெள்ளிக்கிழமை ஆற்றிய உரையின் மற்றொரு பகுதி.

(நேற்றைய தொடர்ச்சி...)

கடந்த மார்ச் மாதம் நியமிக்கப்பட்ட 559 பட்டதாரிகளில் 94 பேர் அதி காரிகளினதும், அரசியல்வாதிகளினதும் விருப்பில் யாழ்.மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறையுள்ள போது தங்களுடைய இவ்வாறான செயற்பாடுகளை எவ்வாறு நியாயப்படுத்துவது?

தகவலறியும் சட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் தரப்பட்ட தகவலின் அடிப்படையில் கடமை நிறைவேற்று அதிபர் என்பவர் ஒரு பாடசாலையில் அதிபர் இல்லாதபோது அதற்காக நியமிக்கப்படுபவரே கடமை நிறைவேற்று அதிபராவார். அவரின் நியமனக் கடிதத்தில் புதிய அதிபர் நியமிக்கப்படும் போது உடனடியாகத் தாங்கள் முன்பிருந்த பதவிக்குச் செல்ல வேண்டு மென்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய தேவையும் இல்லை, சுற்று நிருபமும் இல்லை. தகுதியான புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டதும் கடமை நிறைவேற்று அதிபர் பதவி வலிதற்றதாகி விடும். இது கல்வி அமைச்சிலிருந்து கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்பாக என்னிடமிருக்கும் அதிகார பூர்வமான கடிதம். யாழ் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கடமை நிறைவேற்று அதிபராக இருந்தவர் அங்கு புதிய அதிபர் நியமனம் பெற்றதும் அதிபர் பதவியிலிருந்து கீழிறக்கப்பட்டார். அதன்பின் என்ன செய்திருக்கின்றீர்கள், கலட்டி மெதடிஸ் பாடசாலையில் தகுதியுடனிருந்த ஓர் அதிபரை (தரம் III) கொக்குவில் இந்துக் கல்லூரிக்குப் பலவந்தமாகப் பிரதி அதிபராக நியமித்துவிட்டு பரமேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து பதவியிழந்த அதிபரை கலட்டி மெதடிஸ் (MMTMS) பாடசாலைக்கு கடமை நிறைவேற்று அதிபராக நியமித்துள்ளீர்கள். கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இரண்டு பிரதி அதிபருக்கே வெற்றிடமுள்ளது. ஆனால் தற்போது அங்கு நான்கு பிரதி அதிபர்கள் உள்ளனர். அவ்வாறு இட மாற்றம் செய்யப்பட்ட அதிபர் தன்னை வலயக் கல்விப் பணிப்பாளர் தனது காரியாலயத்திற்கு அழைத்து அழுத்தம் பிரயோகித்து தன்னிடமிருந்து ஒப்புதற் கடிதமொன்றைப் பெற்றார்களென்று ஏற்கனவே மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றார். வலயக் கல்விப் பணிப்பாளர் இது அமைச்சருடன் கதைத்துத்தான் எடுக்கப்பட்ட முடிவென்றும் இனி எதுவும் செய்ய முடியாது என்று தனக்குக் கூறியதாகவும் அவர் கூறுகின்றார். அதற்குரிய ஆதாரமும் என்னிடம் உண்டு.





புனித ஜோன் பொஸ்கோ, யாழ் இந்து ஆரம்ப மற்றும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைகளில் தரம்1 அனுமதி தொடர்பாக நான் இந்தச் சபையிலே கூறியிருக்கின்றேன், விசாரணை செய்யுங்களென முன்னைய அமைச்சரைக் கோரியிருக்கின்றேன், அவர் எல்லாம் சுற்று நிருபங்களின் அடிப்படையில் தான் நடைபெறுகின்றது எனக் கூறினார். இது கணக்காய்வு அறிக்கையிலேயே கூறப்பட்டிருக்கின்றது,

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 240 மாணவர்களிடமிருந்து ரூ. 2.4 மில்லியன் தொகை 2013 இல் மட்டும் சேகரிக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட நிதி பாடசாலையாலோ அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலோ பேணப்பட்ட வங்கிக் கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லையென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, இதற்கு யார் பொறுப்புக் கூறப் போகிறீர்கள். நான் வெளிப்படையாகவே கூற விரும்புகின்றேன் முன்னைய கல்வி அமைச்சரே, தங்களுடைய முன்னாள் பிரத்தியேகச் செயலாளரும் இந்தப் பணச் சேகரிப்புகளில் ஈடுபட்டவர்களில் ஒருவர் என நான் அறிகின்றேன்.

இப்பாடசாலைகளின் அனுமதியில் பல முறைகேடுகள் இருப்பதை நான் அன்றே சுட்டிக்காட்டியிருந்தேன். எல்லா விடயங்களும் சட்டம், ஒழுங்கின் படி நடைபெறவேண்டுமென சபையில் உரத்துக் கூறுகின்ற புதிய கல்வி அமைச்சரே தரம் 1 அனுமதிக்குத் தனக்குத் தெரிந்தவர்களுக்கு அனுமதி எடுத்துக் கொடுத்துள்ளாரென்பதை நான் இங்கு உறுதியாகக் கூற விரும்புகின்றேன். இது அவர் அமைச்சராவதற்கு முன்பு, அமைச்சராகிய பின் இதுபோன்று மேலும் செய்வாரோ தெரியாது. ஊருக்கு உபதேசம், உனக்கில்லை என்ற பழமொழியை அமைச்சர் பின்பற்றுகின்றார் போலும்.

### வீண் விரயங்கள்

ஆசிரியர்-அதிபர் மாநாட்டுக்கென இரண்டு நாள்களில் 40 மில்லியன் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இது எவ்வாறு கல்வி வளர்ச்சிக்கு உதவியது என விசாரணைக் குழுவின் அறிக்கையில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. விசாரணைக் குழு அறிக்கையில் மட்டுமல்ல 2014 கணக்காய்வு அறிக்கையில் ரூபா 149.68 மில்லியன் செலவில் நடாத்தப்பட்ட பல்வேறு செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட தரவுகள் கணக்காய்வுக்குத் தரப்பட்டிருக்க வில்லையெனக் கூறப்பட்டிருக்கின்றது. வீண்விரயச் செயற்பாடுகள் தொடர்பான விசாரணைக் குழுவின் அவதானத்தைக் கணக்காய்வு அறிக்கை உறுதிப்படுத்துகின்றது.

### முன்னாள் அமைச்சரின் வாசஸ்தலப் பாதுகாப்புக்கு ரூ.5 லட்சம் செலவு

முன்னாள் கல்வி அமைச்சரின் வாசஸ்தலத்துக்கு 2015 இல் ரூ.496,600/- செலவில் தனியார் பாதுகாப்புச் சேவை வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு சர்ச்சைக்குரிய கொடுப்பனவாகக் கணக்காய்வு அறிக்கையில் கூட தெரிவிக்கப்பட்டுள்ளது.

99 ஆவது அமர்வில்...

## அமைச்சரின் அழுத்தத்தால் பலருக்கு நியமனங்கள்

வடமராட்சி கல்விப் பணிப்பாளர் நந்தகுமார் தொடர்பாக விசாரணைக் குழுவின் அறிக்கையில் கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரது சாட்சியங்களிலிருந்து கல்வி அமைச்சில் நடைபெற்ற நியமனங்கள், பதவி வழங்கல் இடமாற்றம் தொடர்பில் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட நிர்வாக ரீதியான கடமைகளில் அமைச்சர் வாரியம் தலையிட்டுள்ளதாகவும் கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதே அமைச்சர்களினதும், அமைச்சர் வாரியத் தினதும் கடமையாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது,

நந்தகுமாரின் விடயத்தில் மட்டுமல்ல வலி. வடக்குக் கல்விப்பணிப்பாளர் சந்திரராஜாவின் விடயத்திலும் இதே தவறையே அமைச்சர் வாரியம் விட்டுள்ளதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. ஆதலால் விசாரணைக் குழுவின் அறிக்கை இதில் தெளிவாக உள்ளதென்பதையே சந்திரராஜா தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பு உறுதிப்படுத்துகின்றது.

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையின் அதிபர் கல்வி அமைச்சரின் அழுத்தம் காரணமாகவே நியமிக்கப்பட்டார் என செயலாளரின் வாக்குமூலத்தை வைத்துக் கொண்டு விசாரணைக்குழு முடிவுக்கு வந்துள்ளது.

அமைச்சரின் அழுத்தத்தில் நியமிக்கப்பட்ட இவ் அதிபரைப் பற்றி மேலும் சில விடயங்களை நான் குறிப்பிட வேண்டும். அதிபர் தொடர்பாகக் கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்ட தன்படி யுனிசெப் உதவியுடனான வகுப்பறைக் கட்டட நிர்மாணத்தின் போது அதிபரினால் மேலதிக கொடுப்பனவாக ரூ. 210,240/- வழங்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டினை அவர் ஏற்றுக் கொண்டு மாதாந்தம் ரூ.25,000/- செலுத்துவதற்குச் சம்மதித்துள்ளார்.

### அதிபரின் கைவரிசை

இவ்வாறு குற்றம் செய்தவர் 1000 இற்குட்பட்ட மாணவர்களைக் கொண்ட சென் திரேசா பாடசாலையிலிருந்து 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் அங்கும் தனது கைவரிசையைக் காட்டியுள்ளார். உலக உணவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கு கொடுக்கப்பட்ட உலர் உணவுப் பொருள்களின் கையாளுகை தொடர்பாக இவ் அதிபர் மீது மாவட்டச் செயலகக் கண்காணிப்பு அலகினால் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உலர் உணவு விடயம் தொடர்பாகத் தகவல் கொடுத்த ஆசிரியை பழிவாங்கப்பட்டு வலயக் கல்வி அலுவலகத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதே அதிபர்தான் அண்மையில் விளையாட்டாகத் தேங்காய் பிடுங்கிய மாணவர்களைப் பொலிஸாரிடம் கையளித்த போது இப்பிரச்சினையைப் பாட சாலை மட்டத்திலேயே தீர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கேட்டிருந்தும் அம்மாணவர்களை பொலிஸ் மூலம் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தியவர் என்பதும் கவனிக்கப்படவேண்டியதாகும். இவ்வாறானவர்களைத்தான் முன்னைய கல்வி அமைச்சர் காப்பாற்றிக் கொண்டிருந்திருக்கின்றார்.

### அதிகாரத் துஷ்பிரயோகம்

கல்வி அமைச்சர் அவர்களின் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாக விசாரணைக் குழுவால் கூறப்பட்டவற்றிற்கு மேலாகவும் என்னால் ஆதாரங்கள் சமர்ப்பிக்க முடியும். கிளிநொச்சியில் வலயக் கல்விப் பணிமனைக்கு



கையளிப்புச் செய்யப்பட்ட 6 ஏக்கர் காணியில் ஒரு ஏக்கரை ஜெயராஜா என்பவருக்கு வழங்கும்படி கரைச்சி பிரதேச செயலாளரிற்குக் கல்வி அமைச்சால் கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. அதன் பின்பு அதே ஜெயராஜாவுக்கு அரை ஏக்கரைக் கொடுங்களென இன்னொரு கடிதம் எழுதப்பட்டிருக்கின்றது. அதன் பின்பு ஜெயராஜாவுக்கு அரை ஏக்கரும், கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயக் காணியில் அத்துமீறியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு 2 பரப்பு வீதம் வழங்கி மீதிக் காணியைக் கல்வி வலயத்துக்கு வழங்குமாறும் கல்வி அமைச்சரினால் கோரப்பட்டிருக்கின்றது. கல்வி அமைச்சருக்குக் காணி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா? இதுவும் ஓர் அதிகார துஷ்பிரயோகமே. (*14 ஆம் பக்கம் பார்க்க...*)




பொன்.வேணு கிருஷ்ணா

இந்த வாரத்துக்குப் பின்னர், ஜேர்மனியில் G-20 உச்சி மாநாட்டுக்கு ஒருபுறம் அவர்கள் சந்திக்க வேண்டுமென ட்ரம்பும், ஜியும் தங்களது தொலைபேசி அழைப்பில் மீள்உறுதிப்படுத்தினர். பதற்றங்களை குறைக்கவும், இக்கட்டு நிலைமையைத் தடுக்கப் பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுக்கும் வகையில் இன்னும் செயலாற்றவும் அமெரிக்காவை சீன அதிகாரிகள் பலமுறை வலியுறுத்தி இருப்பினும், வடகொரியா மீதான எந்தவொரு உடன்பாடும் சாத்தியமற்றதாகவே தோன்றுகிறது. ''சரியான சூழ்நிலைகளின்'' கீழ், வேறுவிதமாக கூறுவதானால், அமெரிக்க கோரிக்கைகளுக்கு பியோங்யாங் வளைந்து கொடுத்தாலன்றி, வட கொரியாவுடனான பேச்சுவார்த்தைளுக்கு வாய்ப்பில்லை என்று ட்ரம்ப் நிர்வாகம் நிராகரித்துவிட்டது.

வடகொரியா இன்னுமொரு இடைநிலை தூர ஏவுகணைச் சோதனையை நடத்திமுடித்த பின்னர், ட்ரம்ப் ஒரு டுவிட்டில் மீண்டும் பெய் ஜிங்கை கடுமையாகக் கண்டித்து, பின்வருமாறு கூறினார். ''ஒருவேளை சீனா வட கொரியா மீது கடுமையான நடவடிக்கை எடுத்து இந்த முட்டாள்தனத்தை ஒரே யடியாக முடிவுக்கு கொண்டுவரும்.''

பொருளாதாரத் தடைகள் பியோங்யாங்கை அடிபணியச் செய்யத் தவறுமானால், இராணுவம் உட்பட, ''அனைத்து தேர்வுகளையும்'' பிரயோகிக்குமென அமெரிக்கா அச்சுறுத்தியுள்ளது. வடகிழக்கு ஆசியாவில் பென்டகன் ஒரு பெரும் இராணுவக் கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், வடகொரியாவைத் தாக்குவதற்கான திட்டங்களையும் அபிவிருத்தி செய்துள்ளதானது, சீனா மற்றும் ரஷ்யா உட்பட, ஏனைய முக்கிய சக்திகளையும் இழுக்கக்கூடிய ஒரு பேரழிவுகரமான மோதலைத் தூண்டிவிடும்.

## அதிகரித்து வரும் அமெரிக்க-ஐரோப்பிய ஒன்றிய மோதல்கள்





வொஷிங்டனுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள அதன் பாரம்பரிய கூட்டாளிகளுக்கும் இடையே ஆழமடைந்து வரும் பதற்றங்களுக்கு இடையே, ஜேர்மனியின் ஹம்போர்க்கில் ஜூலை 7-8 இல் நடந்த ஜி20 மாநாட்டுக்கு முன்னதாக 6 July 2017 இற்கு முந்திய புதனன்று இரவு டொனால்ட் ட்ரம்ப் போலந்தை வந்தடைந்தார். ஒரு பொருளாதாரக் கூட்டமாக கருதப்படும் இந்த மாநாடு, வட கொரியா விவகாரத்தில் அமெரிக்கா-சீனாவின் விட்டுக்கொடுப்பற்ற நிலை மற்றும் ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் அதிகரித்து வரும் ஐரோப்பிய ஒன்றிய-அமெரிக்க புவிசார் அரசியல் மோதல் போன்ற உலக இராணுவ நெருக்கடிகள் மீது ஒருங்குவிந்திருக்கும். பரீஸ் காலநிலை மாற்ற உடன்படிக்கையில் இருந்து ட்ரம்ப் விலகியது மற்றொரு பிரச்சினையாக இருக்கும்.



6 July 2017க்கு முந்திய செவ்வாயன்று பியொங்யாங் ஆட்சி, ஒரு கண்டம் விட்டுக் கண்டம் சென்று தாக்கும் ஏவுகணைச் சோதனை நடத்தியதும், வட கொரியாவை பொருளாதார ரீதியில் குரல்வளையை நெரிக்க சீன மறுப்பதைக் குற்றஞ்சாட்டி, அமெரிக்க அதிகாரிகள், போலந்தில் ட்ரம்ப் வந்திறங்கு வதற்கு முன்னதாக, சரமாரியான அறிக்கைகளை வெளியிட்டனர். இவ்வாறிருக்கையில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அரச விஜயமாக பேர்லின் வந்தபோது ஒரு சிறப்பு வரவேற்பைப் பெற்றார், இந்த விஜயம் ஆசியா மற்றும் ஐரோப்பாவின் பொருளாதார சக்திமையங்களான அவ்விரு நாடுகளுக்கு இடையே அதிகரித்து வரும் வர்த்தக மற்றும் அரசியல் உறவுகள் மீது ஒருங்குவிந்திருந்தது. ஜி மற்றும் ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெல் இருவருமே அமெரிக்க கொள்கை மீது கூர்மையான விமர்சனங்களை வெளியிட்டதுடன், உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் இதயத்தானத்தில் பிரதான சக்திகளுக்கு இடையே மோதல் தவறுக்கிடமின்றி தீவிரமடைந்து வருகிறது என்பதே ஜி விஜயத்தில் பிரதான விவகாரமாக இருந்தது.

ஐரோப்பா சர்வசாதாரணமாக வொஷிங்டனுடன் அதன் கூட்டணியைக் கொண்டிருக்க முடியாது என்று இப்போதுவரையில் அவரது பிரபலமான கருத்தை மேர்க்கெல் மீண்டும் வலியுறுத்துவாரா என்று Die Zeit வினவிய போது, ஆம், துல்லியமாக அவ்விதத்தில் தான், என்றவர் பதிலளித்தார்.

**''உலகை ஒரு சிறந்த இடமாக மாற்றுவதற்கு'' என்று தலைப்பிட்டு ஜேர்மன் ஊடகத்தில் ஜி ஒரு கருத்துரை வெளியிட்டார், அது ஜேர்மன்-சீன மூலோபாய உறவுகளை நெருக்கமாக ஆக்குவதற்கு அழைப்பு விடுத்ததுடன் ட்ரம்பின் ''அமெரிக்கா முதலில்'' கொள்கையை மறைமுகமாக விமர்சித்திருந்தது.**

ஜி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டின் உடன் மாஸ்கோவில் அவர் சந்திப்பிலிருந்து நேராக ஜேர்மனிக்கு வந்திருந்தார், அங்கே மாஸ்கோவில் அவ்விரு தலைவர்களும் வொஷிங்டனுக்கு முரண்பாடான வகையில் வட கொரியாவை நோக்கி ஒரு பொதுவான கொள்கையில் அவ்விரு தலைவர்களும் உடன்பட்டிருந்தார்கள். ''உலகை ஒரு சிறந்த இடமாக மாற்றுவதற்கு'' என்று தலைப்பிட்டு ஜேர்மன் ஊடகத்தில் ஜி ஒரு கருத்துரை வெளியிட்டார், அது ஜேர்மன்-சீன மூலோபாய உறவுகளை நெருக்கமாக ஆக்குவதற்கு அழைப்புவிடுத்ததுடன் ட்ரம்பின் ''அமெரிக்கா முதலில்'' கொள்கையை மறைமுகமாக விமர்சித்திருந்தது.

ஜேர்மனியும் சீனாவும் ''இருதரப்பு உறவுகள் மற்றும் பிரதான சர்வதேச மற்றும் பிராந்திய பிரச்சினைகள் மீது விரிவான மூலோபாய உரையாடல்களை நடத்தி, ஒரு முன்னணி பாத்திரம் வகிக்க'' வேண்டும், ''ஜி20 நாடுகள், வெளிப்படையான வளர்ச்சிக்கு பொறுப்பேற்றிருக்க வேண்டியதும், அதன் இதயத்தானத்தில் உலக வர்த்தக அமைப்புடனான (WTO) பன்முக வர்த்தக முறையை ஆதரிக்க வேண்டியதும், உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க தொடர்ந்து வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கு உதவ வேண்டியதும் அவசியமாகும்.'' என்று சீன ஜனாதிபதி எழுதினார்.

மேர்க்கெல் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், சீனா, ரஷ்யா, மத்தியக் கிழக்கு மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் யுரேஷிய உள்கட்டமைப்பு வலையமைப்பை அபிவிருத்தி செய்யும் சீனாவின் பட்டுச்சாலை / ஒரே இணைப்பு-ஒரே பாதை திட்டத்தை ஆமோதித்தார். ''இதுபோன்ற திட்டங்களில் பங்கெடுப்பது நமக்கு மகிழ்ச்சிக்குரியதாக நாங்கள் கருதுகிறோம், நிதி கையாளும் நிகழ்ச்சிமுறை வெளிப்படையாக இருக்குமென நம்புகிறோம், என்றார். ஐரோப்பிய ஒன்றிய-சீன சுதந்திர வர்த்தக மண்டலம் குறித்து பேரம்பேசுவதற்கு இட்டுச் செல்லும் ஒருமுதலீட்டு உடன்படிக்கான தயாரிப்புகளையும், அத்துடன் அரசு சாரா அமைப்புகள் மீது ஒரு புதிய சீனச் சட்டம் நிறைவேற்றியதும் ஜேர்மன் அமைப்புகளுக்கு சீனாவில் வேலை செய்ய கிடைக்கும் மிகப் பெரும் வாய்ப்புகளையும் மேர்க்கெல் உயர்த்திக் காட்டினார்.

ஏர்பஸ் விமானங்களை சீனா விலைக்கு வாங்கும் 22 பில்லியன் டொலர் ஒப்பந்தம் ஒன்றிலும் ஜேர்மன்-சீன அதிகாரிகள் கையெழுத்திட்டனர்.

எவ்வாறிருப்பினும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நிறுவனங்களுக்கு இடையே அதிகரித்து வரும் போட்டிக்கு இடையே, சீனாவில் ஜேர்மன் நிறுவனங்களுக்கு அதிக மற்றும் இன்னும் அனுகூலமான வர்க்க இடங்களை வழங்குமாறு மேர்க்கெல் கோரினார். ''சந்தைகளை அணுகுவதில் நியாயமாக கையாளப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்'', என்றவர் தெரிவித்தார். அது எங்கள் நிறுவனங்களுக்கு ''மிகவும் முக்கியம்'', என்றார்.

**நீங்கள் நிரந்தர சமரசத்துடன் ட்ரம்புக்கு எதிர்வினையாற்ற முயன்றால், அது இறுதியில் மேற்கத்திய மதிப்புகள் அழிக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும்.**

சமூக ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் தோமஸ் ஓப்பர்மான் கூறுகையில், ஐரோப்பிய சக்திகள் ஜி20 நாடுகள் மாநாட்டில் அமெரிக்க நலன்களை நோக்கி முன்பினும் அதிகமாக வெளிப்படையாகவே விரோதப் போக்கை ஏற்க வேண்டுமென கோரினார். ''நீங்கள் நிரந்தர சமரசத்துடன் ட்ரம்புக்கு எதிர்வினையாற்ற முயன்றால், அது இறுதியில் மேற்கத்திய மதிப்புகள் அழிக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும். இங்கே ஏற்கனவே



போலாந்திலும் ஹங்கேரியிலும் சிறிய ட்ரம்புகள் இருக்கிறார்கள், என்றார்.

ஜி20 நாடுகள் மாநாட்டில், அமெரிக்காவைத் தனிமைப்படுத்தி ஏனைய 19 நாடுகளுடன் ட்ரம்புக்கு எதிராக அணி திரளுமாறும் ஒப்பர்மான் மேர்க்கெலுக்கு அழைப்புவிடுத்தார். ''அதை அடைவதற்கு அங்கே நல்ல வாய்ப்பும் கிடைக்கக்கூடும்'', என்றார்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



43




## அத்தியாயம் - III

## படுகொலை முயற்சி

சில நிமிடங்களில் சீருடை தரித்த காவல் துறையினர் எமது மாடி வீட்டுப் படிகளில் ஏறினார்கள். பொதுமக்களும் வெளியே கூடிவிட்டார்கள். எமது போராளிகள் பிரபாகரனுக்கு விடயத்தை அறிவித்தார்கள். பல கிலோமீற்றர் தொலைவில் தமது வீட்டில் இருந்த பிரபாகரனுக்கும் இந்த வெடிச்சத்தம் கேட்டிருக்கின்றது.

ஒன்று தெளிவாகப் புரிந்தது கொலையாளிகள் பின்புறப் படிகளால், மேலே மொட்டை மாடிக்கு வந்திருக்கிறார்கள். மாடிகளுக்கான கதவு பூட்டியிருப்பதைப் பார்த்ததும் பயந்து, கால வெடிகுண்டை மொட்டை மாடியிலே வைத்துவிட்டு, வந்த வழியே ஓடியிருக்கிறார்கள். உடந்தையாக வந்த அந்தப் பெண் மொட்டை மாடிக் கதவைத் திறந்துவிட்டிருந்தால் கொலையாளிகள் மாடிக்கு வந்து எமது கதவுப் படியில் குண்டைப் பொருத்திவிட்டு, கீழே இறங்கி, வாயில் கதவுத் தாழ்ப்பாளைத் திறந்து, காத்திருந்த மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றிருக்கலாம்.

இந்தச் சம்பவத்துக்குச் சில நாள்களுக்கு முன்னதாக எமது வீட்டுக்கு எதிரே கடற்கரையில் இரவு பத்து மணிக்கு பாலாவைத் தனிமையிற் சந்திக்க விரும்புவதாகக் கொலையாளி கேட்டிருந்தார். ஆனால், பாலாவைத் தனியே போகக் கூடாது என்றும், வேண்டுமென்றால் கூடவே ஒரு போராளியைக் கூட்டிச் செல்லுமாறும் பிரபாகரன் கூறினார். அன்று, எமது போராளிகளில் ஒருவர் பாலாவைக் கூட்டிச் சென்றார். இல்லையென்றால் அந்தக் கடற்கரைச் சந்திப்பில் இருந்து பாலா உயிரோடு திரும்பியிருக்க மாட்டார் என்பதில் எனக்கு ஐயமே கிடையாது.

தூசி கீழே படிந்து, புகையும், தெளிவடைந்த பின், எமது திடீர் அதிர்ச்சியில் இருந்து நாம் மீண்ட பின் எமது மாடிக்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட்டோம். ஜன்னல்கள் எல்லாமே உடைந்திருந்தன. கதவுகள் ஒன்றுமே இல்லை. சிறிதும் பெரிதுமாக எல்லாச் சுவரிலும் வெடிப்பு. ஆனால், வெடித் தகர்ப்பின் முழுத்தாக்கத்தையும் எமது மருமகனின் அறையிலேயே கண்டோம். வெடியின் பலம், கம்பி வலையையும் இரும்புச் சலாகைச் சுவரையும் தகர்த்திருந்தது. மொட்டை மாடிக் கூரையில் ஓர் அடி ஆழமும் நான்கு அடி விட்டமுமான ஒரு பெரிய துவாரம். அதனூடாக வானம் தெரிந்தது. மாடிப் படிகளுக்கும் கடும் சேதம். சுவரில் ஓட்டை. எமது வாயில் கதவுக்கு முன்னே குண்டு வைக்கக் கொலைகாரனுக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தால், கட்டடம் முற்றாகத் தகர்ந்திருக்கும். குண்டு எம்மை மட்டுல்ல, கீழ் வீட்டில் வாழ்ந்த குடும்பத்தையே கொன்றிருக்கும்.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தெல்லாம் மக்கள்எம்மைப் பார்க்க வந்தார்கள். தம் கவலையைத் தெரிவித்தார்கள்; ஆறுதல் கூறினார்கள். சம்பவம் நடந்த உடனேயே நூற்றுக்கணக்கானோர் எமது வீட்டைத் தரிசித்துச் சென்றார்கள். அனைத்து இயக்க அமைப்புகளின் தலைவர்களும் வந்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் பத்மநாபா, ரெலோவின் சிறீசபாரத்தினம், ஈரோஸின் பாலகுமார், புளொட்டின் சித்தார்த்தன், ரீ.யூ.எல்.எவ். இன் சிவசிதம்பரம் ஆகிய எல்லோரும் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நிற்பதை உணர்த்தும் வகையில் வந்திருந்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனும் எம்மைப் பார்க்க வரவிருந்தார். ஆனால், பாதுகாப்புக் காரணங்களுக்காக, அவர் தமது வருகையை இரத்துச் செய்ய வேண்டியதாயிற்று. காவல் துறையினர் தம் புலனாய்வைத் தொடக்கினர்.

எனது கதையைக் காவல் துறையினர் செவிமடுத்தார்கள். நான் அடையாளம் காண்பதற்காக ஒரு வெளிறலான பெண்ணை அடையாளம் காட்டினார்கள். அவர்களுடைய புலனாய்வு திசை மாறத் தொடங்கியது. விடுதலைப் புலிகளின் உள்வீட்டு வேலையே இந்தக் குண்டுச் சம்பவம் என்று சந்தேகப்பட்டார்கள். இறுதியில் பாலா கூறியதை வைத்துக்கொண்டு உண்மைக் குற்றவாளியைக் காவல் துறையினர் கண்காணிக்கத் தொடங்கினர். கொலையாளி கொழும்பிலுள்ள தனது முதலாளி - லலித் அத்துலத் முதலியோடு தொலைபேசி மூலம் உரையாடிக் கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உத்தேசக் கொலையாளி விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே, குற்ற உணர்வு மேலிடக் கண்ணீரும் கம்பலையுமாகச் சதித்திட்டத்தை ஒப்புக் கொண்டார். உடந்தையாக இருந்த பெண் அவருடைய மருமகள் என்பதும் தெரியவந்தது.

குற்றவாளி, பல மாதங்களாகச் சென்னை மத்திய சிறையில் காவலில் இடப்பட்டார். கொலை முயற்சிக்காக வழக்குப் பதிய மாநில காவல் துறை மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு அதிகாரிகள் முறியடித்தார்கள். ஜெயவர்த்தனவின் அமைச்சரவையின் மூத்த அமைச்சர் ஒருவர் அதில் சம்பந்தப்பட்டிருந்ததால், நாடுகளின் உறவில் அது பெருஞ்சேதம் விளைவிக்கும் என்று அவர்கள் கருதினார்கள். சம்பவத்தை முழுமையாக மூடி மறைக்க இரண்டு அரசுகளும் கூடி முடிவெடுத்ததால், இறுதியில் கந்தசாமி விடுவிக்கப்பட்டார். யாரும் அறியாமல், சிறிலங்கா திரும்பி குற்றவியல் பதிவு எதுவும் இன்றி அமைதியான வாழ்வில் ஈடுபட்டார்.


மாடி வீட்டைத் திரும்பிக் கட்டிக் கொடுக்க விடுதலைப் புலிகள் பெருமளவு நஷ்டஈடு செலுத்த நேர்ந்தது. ஆனாலும், வசதியான அந்த இடத்தில் தொடர்ந்தும் எம்மை வசிக்க விடுவதற்கு வீட்டுச் சொந்தக்காரர் இணங்கவில்லை. சிறு குழந்தைகளோடு அவர் கீழ் வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தார். வெடிச் சம்பவத்தின் பின், நடுங்கியபடி, அந்தக் குடும்பம் அச்சத்துடனேயே வாழ்ந்தது. குண்டுவெடிச் சம்பவத்துக்குப் பிறகு, பாலசிங்கம் குடும்பத்துக்கு வாடகைக்கு வீடு தர சென்னையில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர் பலரும் தயங்கினார்கள். அது புரிந்து கொள்ளப்பட வேண்டியதுதானே? கடைசியில் ஒரு முஸ்லிம் குடும்பம் துணிந்து வீடு தந்தது. எமது புதிய வசிப்பிடம் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனைக்கு அருகே அமைந்திருந்தது. எமது போராளிகளும் அதே சூழலில் தரித்திருந்தார்கள். அதனால், அதுவும் எமக்கு நல்ல வசதியாக இருந்தது. ஆனால், இந்தப் புதிய வீடும் எனக்கு ஒரு புதிய அனுபவத்தை இந்தியாவில் தந்தது.

## இந்தியாவில் வீட்டு ஊழியம்

இந்த நூல் முழுவதிலும், தமிழ்நாட்டில் பரந்து கிடக்கும் சமுதாய முரண்பாடுகளையும் வறுமையையும் உணர்த்தும் வகையிலே, ஆங்காங்கே பல நிகழ்வுகளைத் தொட்டுக் காட்டியிருக்கின்றேன். அல்லது மனப் பதிவுகளை விவரித்திருக்கின்றேன். நகரங்களில் ஒருபுறம் மத்திய வர்க்கத்தினரும், பணக்காரரும் சொந்த அல்லது வாடகை வீடுகளில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். மறுபுறம், கிராமங்களிலும், நகர்ப்புறச் சேரிகளிலும் பெரும்பான்மை வறியவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் சமூக, பொருளாதார புறக்கணிப்பாலும், இடர்பாடுகளாலும் சபிக்கப்பட்டவர்கள்; பல இலட்சக் கணக்கானவர்கள்; சிறிய ஓலைக் குடிசைகளில் ஒண்டியிருக்கிறார்கள். இந்தக் குடிசைகளில் தூங்க, சமைக்க, குளிக்க என்று தனித்தனியான அறைகள் கிடையா. இவை எல்லாமே ஒற்றை அறைக் குடிசைகள். இதற்கு உள்ளேயே ஒரு முழுக் குடும்பமும் சமைத்து, உண்டு, உறங்கும். இங்கே சமையல் வாயு விநியோகம் கிடையாது. மின்சார வழங்கலும் இல்லை. இந்தக் குடிசையின் பின்புறத்தில் சிறிது தூரம் மீண்டும் செல்லும் நெடும்புல் புதர், பற்றை, செடிகள் ஆகியவை வழங்கும் மறைவிடமே அவர்களுடைய கழிப்பிடம். வீட்டின் அன்றாட குப்பை, சுற்றுப் புறத்தில் இறைந்து கிடக்கும்.

இந்த வறுமைக்கும் சிறுமைக்கும் மத்தியில், தங்கள் கண்ணியத்தைக் காப்பாற்றுவதிலும், குடும்பத்தை உயிரோடு பேணுவதிலும், பெண்கள் படும் சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த இடர்பாடுகளின் சிகரமாகப் பெண்கள் முகம் கொடுப்பது குடிசைகளுக்கான நீர்த்தட்டுப்பாடு! பெரும்பாலான இந்தக் குடிசைக் குடும்பங்களுக்குப் பொதுவான ஒரு நீர்க்குழாய் இருக்கும். இதிலிருந்து நீர் எடுப்பதும் பெண்களின் பணியே. மிகச் சின்ன வயதிலேயே பெண்கள் வீட்டு வேலையில் ஈடுபடத் தொடங்கி விடுவார்கள். ஆறு, ஏழு வயதுச் சிறுமிகள் நீர்க்குழாயிலிருந்து குடங்களில் நீர் சுமந்து வீடுகளுக்குக் கொண்டு வருவார்கள். முதலில் தண்ணீர் வரிசையில் காத்துநிற்க வேண்டும்; நீர்ப்பம்பியை அமுக்கி, நீர் பிடிக்க வேண்டும். பெண்ணின் நேரத்தை உறிஞ்சி, பொறுமையைச் சோதிக்கும் சடங்கு இது. கோடை காலத்தில், உள்ளூர்ச் சமூகத்தின் நீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய நீர் விநியோகம் போதாதிருக்கும். அப்போது, அந்தச் சுற்றுப் புறத்தில் உள்ள வேறு நீர்க்குழாயைத் தேடும் நிர்ப்பந்தம் பெண்களுடையதாகவே இருக்கும். தண்ணீர் தேடிக் கூட்டம் கூட்டமாகச் செல்லும் பெண்கள், அடிக்கடி எமது வீட்டு முன்வாயிலில் நின்று, முன் வளவுக்குள் இருக்கும் நீர்க்குழாயில் நீர் பிடிக்க அனுமதி கோருவார்கள். கோடையில் மத்திய தர வர்க்கத்தினரும் நீர்த்தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டு, நீருக்காகத் தேடுதலில் ஈடுபடுவர். இல்லையென்றால், அந்தப் பக்கம் நீர் வழங்க வரும் நீர்வண்டிக்காகக் காத்துநிற்பர்.

(தொடரும்...)



# கூட்டமைப்பின் தேர்தல் வெற்றிக்கு தனிக் கட்சிகள் உரிமை கோர முடியாது!

## ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷுக்கு ரெலோ ஸ்ரீகாந்தா பதில்

வேட்பாளர் றெமீடியஸை தவிர்த்து, மேலும் நான்கு வேட்பாளர்களே இந்தத் தேர்தலில் ஒதுக்கப்பட்டிருந்தனர். இதைவிட பெண் வேட்பாளர் ஒருவரையும் நாம் நிறுத்தியிருந்தோம்.

எமது கட்சி வேட்பாளர்களுக்கு மாத்திரமன்றி, தமிழ்க் காங்கிரஸ் கட்சியினால் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு பெண் வேட்பாளர்களுக்கு ஆதரவாகவும் எமது உறுப்பினர்கள் செயற்பட்டனர்.

இந்த நிலைமையில், யாழ் நகரில் நடைபெற்ற பிரசாரப் பொதுக் கூட்டங்களில் மிகத் தீவிரமான குற்றச்சாட்டுக்களை, குறிப்பாக யுத்தத்தின் போது யாழ்பாணக் குடாநாட்டில், இரவு நேரங்களில் கடத்தப்பட்டு காணாமற் போனவர்கள் தொடர்பில், எதிரணி மீது பகிரங்கமாக சுமத்தியது யார் என்பதையும், இந்தக் குற்றச்சாட்டுக்கள் எமது பிரசாரத்துக்கு பொது மக்களின் ஆதரவை தார்மீக ரீதியாகப் பெருமளவில் பெற்றுத் தந்தமையையும், இந்தக் கூட்டங்களில் பங்குபற்றிய பிரமுகர்கள் எவரும் மறந்திருக்க முடியாது.

இதேவேளையில், பிரசாரத்தின் இறுதிக்கட்டத்தில், தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக, யாழ்ப்பாணப் புறநகர்ப் பகுதியான சிப்பித்திடலில், கூட்டமைப்பின் பிரசாரப் பொதுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், மேடை முழுவதும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களுமாக நிறைந்திருந்தனர். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கலந்துகொண்ட கூட்டம் அது.

அன்றிரவு அந்தக் கூட்டத்திற்கு நான் சென்ற பொழுது, சமநேரத்தில் அரியாலையில் நடைபெற்றுக் கொண்டிருந்த பிரசாரக் கூட்டத்துக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிறில் தவிர, பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எந்தப் பிரமுகரும் சென்றிருக்கவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிந்தது. உடனடியாகவே மாவை சேனாதிராஜாவிடம் கலந்துரையாடி விட்டு, அக்கூட்டத்திற்கு நான் விரைந்தேன்.

நான் அங்கு சென்ற போது, சிறில் உரையாற்றிக் கொண்டிருந்தார். மேடையில் தலைமை வகித்தவரும், அரியாலைக்கான வேட்பாளரும் மட்டுமே இருந்தனர்.

எதிரணியைச் சேர்ந்தவர்களின் அநாவசிய நடமாட்டம் பொதுக் கூட்டச் சூழலில் ஒரு பதற்றமான நிலைமையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. வீதியோரத்தில் நின்ற பொதுமக்களை விரட்டுவதில் பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த சில நபர்களும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இருந்தும் கூட்டத்தை நாங்கள் வெற்றிகரமாக நடத்தினோம். சிறிலைத் தொடர்ந்து, நான் உரையாற்றினேன். என்னைத் தொடர்ந்து உரையாற்ற யாராவது பேச்சாளர் வருவார் என்ற எதிர்பார்ப்புடன் நான் நீண்ட நேரம் பேச வேண்டி இருந்தது. ஆயினும் வேறு எவரும் வந்து சேர்ந்திராத நிலையில், நன்றியுரையுடன் கூட்டம் முடித்து வைக்கப்பட்டது.

அங்கிருந்து சிப்பித்திடல் கூட்டத்துக்கு நான் திரும்பிச் சென்றபோது, கூட்டம் முடிந்து, மேடையைக் கலைத்துக் கொண்டிருந்தார்கள்.

இறுதியாக தேர்தல் பிரசாரம் முடிவதற்கு முதல் நாள், குருநகர் மற்றும் நாவாந்துறையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றிய பின்னர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம், அடுத்த நாள் நான் வவுனியா செல்ல விரும்புவதைத் தெரிவித்தேன்.

ஒருசிலர் நம்பிக் கொண்டிருப்பது போல, வவுனியாவில் எமது வெற்றி வாய்ப்பு உறுதியானதாக இல்லை என்பதை, நான் அவரிடம் கூறிய போது, ஆச்சரியப்பட்டார்.

தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாள், வவுனியாவில் நாம் கூட்டம் நடத்தியாக வேண்டும் என்பதையும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பிரசாரத்துக்குப் பொறுப்பாகவிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் நான் கூறியிருக்கின்றமையையும், அவரிடம் தெரிவித்தேன். அவரும் சம்மதித்தார்.

அடுத்தநாள் பாஷையூரில் நடைபெறவிருந்த எமது இறுதிக் கூட்டத்தைத் தவிர்த்துவிட்டு, கொழும்புக்குச் சென்று (அப்போது ஏ9 பாதை மூடப்பட்டிருந்தது) அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் இமாமையும் இணைத்துக்கொண்டு வவுனியா சென்றடைந்தேன்.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியவை



ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு மே மாதம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைக் கையாள்கின்ற பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலையில் சுமத்தப்பட்டது.

அப்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகித்தன. யுத்தத்திற்குப் பின்னர் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வவுனியா நகரசபைக்கும் யாழ்.மாநகர சபைக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

முகாமில் அடைக்கப்பட்டிருந்த மக்கள் தொடர்பாகவும் ஒட்டுமொத்த யுத்தம் தொடர்பாகவும் வன்னி மக்களும் யாழ்ப்பாண மக்களும் எத்தகைய உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவதற்காக இலங்கை அரசு இந்த இரண்டு தேர்தல்களையும் நடத்தியது.

வேட்புமனுக்களில் கையெழுத்திட்டு தேர்தல் திணைக்களத்திடம் கையளிப்பதற்குக் கூட தமிழரசுக் கட்சியின் செயலாளர் வவுனியா வரமுடியாத நிலையில் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு ஒருநாள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அனுராதபுரம் சென்று மாவை சேனாதிராஜாவின் கையெழுத்தை வாங்கி வந்து வேட்பாளர்களை நியமித்து அந்தத் தேர்தலுக்கு முகங்கொடுத்தோம்.

### வேட்பாளர்கள் பின்வாங்கினர்

வேட்பாளர்களாகப் பெயர்கொடுத்தவர்கள் பலர் இறுதி நேரத்தில் பின் வாங்கினர். அப்படியிருந்தபொழுதிலும்கூட கூட்டமைப்பு வெல்ல வேண்டும் அதன் மூலம் அரசுக்குத் தெளிவான செய்தி சொல்லப்படவேண்டும் என்பதை முன்னிறுத்தி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கடினமாகப் போராடி வவுனியா நகரசபைத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனத்தை வெற்றிகொள்ள வைத்தது. பயத்தின் நிமித்தம் வேட்பாளர்களே ஒதுங்கியிருந்த நிலையிலும் தமிழரசுக் கட்சி பிரசாரத்திற்கு வருவதற்கே அஞ்சிய நிலையிலும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியே அந்த வெற்றியைத் தேடிக்கொடுத்தது.

இதனைப் போன்றே யாழ். மாநகர சபைத் தேர்தலிலும் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் ஒருவரும் முன்வராத நிலையில் - குறிப்பாக இளைஞர்கள் முன்வராத நிலையில் - யாழ்ப்பாணத்திற்கு வெளியிலிருந்து இளைஞர்களை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி களமிறக்கியது.

அது மாத்திரமல்லாமல், வேட்பாளர்களே பிரசாரத்திற்கு வருவதற்கு அஞ்சிய நிலையிலும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் உள்ளிட்ட அனைவரும் மாட்டின் வீதி காரியாலயத்தில் முடங்கியிருந்த நிலையிலும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் தான் வீதி வீதியாகப் பிரசாரங்களில் ஈடுபட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 'வீடு'சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக அரும்பாடுபட்டன.

### அனைவருமே புரிந்து கொள்ள வேண்டும்

இவ்வாறு இராணுவத்தினதும் புலனாய்வுப் பிரிவினரதும் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும் ஐக்கியத்தைக் காக்கவும் மக்களுக்கு நம்பிக்கையூட்டவும் தமிழினம் தோற்றுவிடவில்லை என்பதை நிலைநாட்டவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் தங்களது கட்சிச் சின்னங்களை விடுத்து வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு பிரசாரத்தில் ஈடுபட்டன. இவ்வாறுதான் தமிழரசுக் கட்சி காப்பாற்றப்பட்டது என்பதை இன்று பதவிக்காக வந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டும்....

கடந்த 20 ஆம் திகதி காலைக் கதிரில் 'மாற்றுத் தலைமை ஏன்?' என்பது தொடர்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறிய கருத்துகள் பிரசுரமாகியிருந்தன. அதில் கூறப்பட்ட விடயங்களுக்கு ரெலோ செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா இப்போது பதில் அனுப்பியிருக்கின்றார். சுரேஷின் எந்தக் கருத்துக்கு அவர் பதில் தர முயல்கின்றார் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்வதற்காக சுரேஷின் அந்த அறிக்கையில் குறிப்பிட்ட பகுதி மட்டும் இங்கு மீள் பிரசுரம் செய்யப்படுகின்றது. மேற்படி சம்பவம் கட்டவிழ்ந்த காலத்தில் ஸ்ரீகாந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ-ர்)

# கூட்டு எதிரணி பிளவுபடும் நிலையில் கருத்து முரண்பாடுகள் பகிரங்கம்!

கொழும்பு, ஜூலை 24

உள்வீட்டுச் சண்டை காரணமாக கூட்டு எதிர்க்கட்சி இரண்டாகப் பிளவுபடும் நிலைமை காணப்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசமைப்பு சபையிலிருந்து விலகுவது தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சிக்குள் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன எனக் கூறப்படுகின்றது.

அரசமைப்பு சபையிலிருந்து கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் விலக வேண்டும் என விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இதற்கு எதிராக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சில எம்.பிக்கள் அரசமைப்பு சபையிலிருந்து விலகாமல், நாட்டுக்கு எதிராக வரும் விடயங்களைச் சரியாக இனங்கண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் கருத்துக்கு மதிப்பளிக்காமல், தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் அரசமைப்புச் சபையிலிருந்து விலகுகின்றோம் எனச் சபாநாயகரிடம் தமது அறிக்கையையும் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து, பொலன்னறுவையை பிரதிநிதித்துவப் படுத்தும் ஐ.ம.சு.மு.யின் ரொஷான் ரணசிங்கவும் அரசமைப்பு சபையிலிருந்து விலக வேண்டும் என கருத்து வெளியிட்டுள்ளார்.

இதனால், விலகக் கூடாதென்ற கருத்திலுள்ள ஐ.ம.சு.மு.யின் உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, ஸ்ரீ ல.சு.க. வைப் பிரதிநிதித்துவப்படுத்தி மஹிந்தவுடன் உள்ள எம்.பிக்களோடு ஜனாதிபதியுடன் உள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் பலசுற்றுப் பேச்சுகள் நடத்தியுள்ளனர் எனவும், இதன் பயனாக கூட்டுஎதிர்க்கட்சியிலுள்ள குழுவொன்று அரசுடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# கூட்டு எதிரணிக்குள் பிளவு இல்லை!

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கூட்டு எதிர்க்கட்சிக்குள் பிளவுகள் இல்லையெனவும் அதனை எவரும் பிரிக்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணி அரசமைப்புச் சபையிலிருந்து விலகியமை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்துள்ள கட்சிகள் மற்றும் அதன் உறுப்பினர்கள் அவர்களின் கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுத்துச் செயற்பட்டு வருகின்றனர்.

கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள ஏதாவது ஒரு கட்சி அரசமைப்பு சபையிலிருந்து விலகிவிட்டது என்பதற்காக கூட்டு எதிர்க் கட்சியிலிருந்து பிரிந்து சென்று விட்டது என்று அர்த்தம் கொள்வது தவறானது.

கூட்டு எதிர்க் கட்சியை எவரும் விரும்பும் விதத்தில் உடைத்துவிடவோ, பிளவுபடுத்தவோ முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள சிலர் அரசுடன் இணைந்துகொள்ளப் போகின்றார்கள் என்ற தகவல்கள் கசிய ஆரம்பித்துள்ளன.

ஜனாதிபதியுடன் உள்ள சிலர் கூட்டு எதிர்க் கட்சிக்கு செல்லப் பார்க்கின்றார்கள் என்பது போலவே, கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள சிலர் அரசுடன் இணைய பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

இந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கருத்தைக் கூறியுள்ளார்.

# ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை; இனிச் சந்திக்கப் போவதுமில்லை!

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. கூறுகிறார்




ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவை தான் சந்தித்துப் பேசியதாக வெளியாகியுள்ள செய்தி பொய்யானது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ, மாகாண சபை அமைச்சர் ஒருவருடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துள்ளதாக செய்தி வெளியா கியிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்ட நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, தான் சந்திக்கவில்லை எனவும் சந்திப்பதற்கான நோக்கமும் இல்லை என்று கூறியுள்ளார்.

மேலும் இலங்கை ஊடகங்கள் ஏன் பொய் யானசெய்திகளை வெளியிடுகின்றன எனவும் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

# முல்லைத்தீவில் கடும் வறட்சி; கால்நடைகள் பெரும் பாதிப்பு!



தற்போது நாட்டில் பரவலாக நிலவும் வறட்சி நிலை காரணமாகப் பல்வேறு பகுதிகளிலும் , விவசாய நடவடிக்கைகள் மற்றும் கால்நடைகள் என்பன பெருமளவில் பாதிப்படைந்துள்ளன.

இந்த நிலையில் முல்லைத்தீவு விசுவமடு, நெத்தலியாற்றில் நீர் வற்றியுள்ளதால் கால்நடைகள் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, நெத்தலியாறு, நாச்சிக்குடா மற்றும் அதன் எல்லையோரத்தில் அமைந்துள்ள கல்மடு, கட்டைக்காடு, பகுதிகளிலும் உள்ள கால்நடைகளுக்கான குடிதண்ணீர் நெத்தலியாற்றிலிருந்தே இதுவரை காலமும் பெறப்பட்டது.

இதன் காரணமாக கால்நடைகள்பாதிப்படைந்தது மட்டுமல்லாமல் கால்நடைப் பண்ணையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதி கால்நடைப் பண்ணையாளர்கள் கல்மடுக் குளத்து நீரை கால்நடைகளுக்குத் திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், அங்கு மேற்கொண்டுள்ள 370 ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக்கான நீர் வினியோகத்துக்கே நீர் போதுமானதாக இல்லை என்றும் அவ்வாறு நீர் திறந்து விடப்படுமானால், சிறுபோகச் செய்கை முற்றாக அழிவடையுமெனவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை நடைபெறும் காலங்களில் தேர்தல் நடத்தப்பட முடியாது; தேசப்பிரிய

பரீட்சை நடைபெறும் காலங்களில் தேர்தல் நடத்தப்பட முடியாது என தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையில் எவ்வித தேர்தல்களையும் நடத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிசெம்பர் மாதம் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை நடத்தப்பட விருப்பதனால் மாணவர்களின் கல்வியை பாதிக்கும் வகையில் தேர்தல் நடத்தப்பட முடியாது என அவர் அண்மையில் கட்சித் தலைவர்களிடம் கூறியுள்ளார்.

எவ்வாறெனினும் தேர்தல் முறையில் சில மாற்றங்கள் செய்யப்படவிருப்பதனாலும், நவம்பர் மாதம் வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட இருப்பதனாலும் அரசு நவம்பர், டிசெம்பர் மாதங்களில் தேர்தல் ஒன்றுக்கு செல்வதில்லை என தீர்மானித்துள்ளது. (க)

# தனி ஓர் இனத்துக்கு மட்டும் இலங்கை சொந்தமானது அல்ல!

## அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்



இலங்கை தனி ஓர் இனத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல என்ற உண்மையை தாம் வெளிக்கொண்டு வந்துள்ளோம் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் பல இனமக்கள் வாழ்கின்றார்கள் என்ற பன்மைத் தன்மையை அனைவரும் ஏற்றுக்கொள்வதில்தான் இலங்கையின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இலங்கை மக்கள் என்ற நூல் தேசிய கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சினால் உருவாக்கப்பட்டு, அரச தலைவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

முன்பு பாட நூல்களில் இருந்த சரித்திர உண்மைகள் இப்போது இல்லை. அவை அகற்றப்பட்டு வரலாறு திரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்கள் என்ற நூலின் மூலம் மறைக்கப்பட்ட இத்தகைய சரித்திர உண்மைகளை எடுத்துக் கூறி, அது அதிகாரபூர்வமாக செய்துகாட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கை; பிரித்தானியா கூடிய கரிசனை!

கொழும்பு, ஜூலை 24

ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கான சிறப்பு அறிக்கையாளரின் இலங்கை தொடர்பான கருத்துக் குறித்து பிரித்தானியா கவனம் செலுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் பேன் எமர்சன் கடந்தவாரம் இலங்கைக்கு விஜயம் செய்த நிலையில் தமது கருத்தை வெளியிட்டிருந்தார்.

அதில், இலங்கையில் சித்திரவதைச் சம்பவங்கள் தொற்று வியாதியைப் போன்று இடம் பெறுகின்றன என்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மெதுவான போக்கிலேயே செல்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பிரித்தானிய ஆசிய பசுபிக் பிராந்தியங்களுக்கான அமைச்சர் தமது நாடு இந்த விடயத்தில் கரிசனையை செலுத்தியுள்ளது எனக் கூறியுள்ளார். (க)

# மத்திய மாகாணத்தில் 1,110 டெங்கு நோயாளர்கள்!

இந்த ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை மத்திய மாகாணத்தில் 1,110 டெங்கு நோயாளர்கள் பதிவாகி யுள்ளனர் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் தற்போது மிக வேகமாக டெங்கு நோய் பரவி வருகிறது எனவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது எனவும் மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 15 நாள்களில் கண்டி மாவட்டத்தில் 801 டெங்கு நோயாளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 179 நோயாளர்களும், நுவரெலியா மாவட்டத்தில் 130 நோயாளர்களும் அடங்கலாக 1,110 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# அதிபர், ஆசிரியர் மாநாட்டுக்கு...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இனி சுகாதார அமைச்சுக்கும், மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சுக்கும் வருகின்றேன்

அது மட்டுமல்ல தர்மபுரம் வைத்திய சாலையின் அபிவிருத்திக்கென்று பிரதேச செயலாளரினால் ஒதுக்கப்பட்டு, அக் காணியில் குடியிருந்தவர்களுக்கு அக் காணியில் உடைமை கொள்வதற்கோ, இடம் கொள்வதற்கோ உரித்து இல்லை என நீதிமன்றத்தால் மார்ச் 2015இல் உறுதிப் படுத்தப்பட்ட நிலையிலும், நீண்ட காலமாக மக்கள் அங்கு குடியிருந்ததைக் கருத்தி லெடுத்து சிறுதுண்டு காணி யேனும் வழங்க காணிக் கோரிக்கை அறிவித்தல்களை வழங்கி உரிய ஆவணங்களை வழங்க உதவுமாறு பெப்ரவரி 2016 இல் முன்னாள் கல்வி அமைச்சர் பிரதேச செயலருக்குக் கடிதம் எழுதி இருக்கின்றார்.

காணி தொடர்பான விடயங்களை நீதிமன்றம் கையாளுகின்ற நிலையில் இது தொடர்பாக பிரதேச செயலாளருக்கு எழுதுவதற்கு கல்வி அமைச்சருக்கு என்ன அதிகாரம் உண்டு? இது அதிகார துஷ்பிரயோகம் இல்லையா? சுகாதார அமைச்சரும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

ஏனெனில் நீங்களும் வைத்தியசாலைக்கு ஒதுக் கப்பட்ட காணியை தனியாருக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு உடந்தையாக இருந் திருக்கின்றீர்கள். காணியற்றவர்களுக்குக் காணி கொடுப்பதற்கு நான் எதிரானவன் அல்லன்.

ஆனால் வைத்தியசாலைக்குஎன்று ஒதுக்கப்பட்ட காணியை தனிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதில் சம்பந்தப்பட்டிருக்கின்றீர்கள். அதைத்தான் நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

சுகாதார அமைச்சின் 2015 இல் 'துளுனுகு' செயற்றிட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் போஷாக்கு உணவு வேலைத்திட்டத் துக்கு (Nutrition Intervention) எனக் கொடுக் கப்பட்ட நிதியில் 94 லட்சம் ரூபாவுக்கு ஒரு வாகனம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மக்களின் போஷாக் கின்மையை நீக் குவதற்குப் பதிலாக, அதி காரிகள் தங் களின் போதாக் குறையை நிறைவேற்றியுள்ளனர், இது கணக்காய்வில் கூடச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீன்பிடி போக்குவரத்து அமைச்சால் செயற்படுத்தப் பட்ட தடுப்புக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கான விசேட தேவைகளுக்குச் செலவழிக்கப்பட்ட 430 லட்சம் ரூபா தொடர்பாகக் கணக் காய்வில் பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நாங்கள் சட்டத்திற்கு மதிப்பளித்துத்தான் சமூக செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதில் பல தவறுகள் இழைக்கப்பட்டுள்ளதாகக் கணக்காய்வு அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

நிறைவேற்று செயற் பாட்டுக் குறை பாடுகளில் இறுதி விடயமாக விசாரணைக் குழு அறிக்கை தொடர்பாக ஓரிரு விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் பக்கச் சார்பானவர்கள், ஒவ்வோர் கட்சியைச் சார்ந்தவர்கள், இவ் விசாரணையை நடத்துவதற் குத் தகுதியுடையவர்களல்லர் என்ற கருத்து சில ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் வேண்டு மென்றே வி சமத்தனமாகப் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. ஒரு அமைச்சரின் தூண்டுதலினாலேயே இவ்வாறான பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக எனக்கு அறியக் கிடைக்கின்றது. விசாரணைக் குழு அங்கத்தவர்கள் இவ் விசாரணையை நடத்துவதற்குப் பொருத்தமற்றவர்கள் என்று கருதியிருந்தால் விசாரணைக் குழு உறுப்பினர்களின் பெயர்கள் சபைக்கு முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வேளையிலேயே அதற்கான தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்திருக்க வேண்டும்.

அவ் விசாரணைக் குழுவை ஏற்றுக் கொண்டு, அதன் முன் ஆஜராகி விளக்கங்கள் கொடுத்துவிட்டு இன்று அவ் வுறுப்பினர்கள் மீது குறைகூறுவது மிகவும் கீழ்த்தரமான ஓர் பண்பற்ற செயலென்பதை நான் முதலில் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

விசாரணைக் குழுவின் அறிக்கையில் அமைச்சின் செயலாளருக்கு வழங்கப் பட்ட நிர்வாக ரீதியிலான கடமைகளில் அமைச்சர் வாரியம் தலையிடுவது தவறானதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கொள்கை ரீதியிலான முடிவுகளை எடுப்பதே அமைச்சர்களினதும், அமைச்சு வாரியத்தினதும் கடமை யெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர்களின் இக் கருத்துடன் நான் முழுமையாக உடன்படுகின்றேன். அது மட்டுமல்ல பல இடங்களில் அமைச்சர் வாரியத்தின் அனுமதியுடன்தான் சில அதிகார துஷ்பிரயோகங்கள் நடைபெற்றுள்ளன வென்றும் அவ் அறிக்கையிலிருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது.

ஆதலினால் அந்த அறிக் கையில் சுட் டிக்காட்டப்பட்டுள்ள பல அதிகார துஷ்பிரயோகங்களுக்கு ஏற்கனவே இராஜினாமாச் செய்து கொண்ட இரு அமைச்சர்கள் மட்டுமல்ல, முழு அமைச்சரவையுமே பொறுப்பு நிற்க வேண்டும் என்பதையும் நான் இங்கு கூறி வைக்க விரும்புகின் றேன்.

(மிகுதி நாளை...)

# சர்வதேச சட்டப்படியே இலங்கை அரசு தமிழக மீனவர்களைக் கைது செய்கிறது!



தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை தெரிவிப்பு

தமிழக மீனவர்களை சர்வதேச சட்டப்படியே இலங்கை கடற்படை கைது செய்கிறது.

-இவ்வாறு தமிழகத்தின் பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.ரி. தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை தியாக ராஜ நகரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசு கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் தமிழக மீனவர்களைச் சந்தித்திருந்தேன். தங்களின் வாழ்வாதாரம் தொடர்பில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க உள்ளேன்.

இலங்கைச் சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளில் முன்னேற்றம் உள்ளது. மேலும், மீனவர்களுக் கான புதிய திட்டத்தின் கீழ் படகுகள் வாங்கத் தேவையான நிதியுதவியை வங்கிகள் மூலம் பெற நடவடிக்கை எடுக் கப்படும்

இதேவேளை, தேர்தலுக்கான பணிகளை தமிழக அரசு உடனடியாக மேற் கொள்ள வேண்டும் .-என்றார்.

## ராஜீவ் கொலை வழக்கில் சிறைவாசம்:

# ஜீவ சமாதி அடைய அனுமதி தாருங்கள்!



ஆயுள் கைதி முருகன் மனு

வேலூர், ஜுலை 24

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு ஆயுள்தண்டனை அனுபவித்துவரும் முருகன், ஜீவ சமாதி அடைய அனுமதி கேட்டு சிறைத்துறைக்கு மனு கொடுத்துள்ளார்.

இந்தக் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதே வழக்கில் தண்டனை பெற்ற முருகனின் மனைவி நளினி பெண்கள் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.

இவர்கள் 4 பேரும் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையிலேயே தங்களுடைய வாழ்வை கழித்து வருகின்றனர். இதில் நளினியையும், முருகனையும் கணவன்-மனைவி என்பதால் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இருவரும் பொலிஸ் பாதுகாப்புடன் சந்தித்துப் பேச அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பெரும்பாலானோர் 50 வயதை நெருங்கிவிட்டனர். அவர்கள் வாழ்வின் பெரும்பகுதியை சிறையிலேயே கழித்து விட்டனர். இந்த நிலையில் நளினி-முருகன் தம்பதியின் மகள் ஹரித்ராவுக்கு திருமணஏற்பாடுகள் நடக்கின்றன.

இதற்காகத் தன்னை சென்னை புழல் சிறைக்கு மாற்ற வேண்டும் என்று நளினி ஏற்கனவே சிறைத்துறைக்கு மனு அளித்துள்ளார். ஆனாலும், அவரது கோரிக்கை ஏற்கப்படவில்லை.

இதற்கிடையில் கடந்த மார்ச் மாதம் சிறையில் உள்ள முருகனின் அறையில் இருந்து கைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. ஆரம்பத்தில் மொட்டைத் தலையுடன் காணப்பட்ட முருகன் இப்போது காவி உடை, சடாமுடி என முழுச் சாமியாராகவே மாறியுள்ளார்.

இந்த நிலையில், முருகன் தனது கோரிக்கையை முன் வைத்து சிறைத்துறைக்கு மனு அனுப்பியுள்ளார்.

அதில், 'நான் எனது வாழ்நாளில் அதிக காலத்தை சிறையிலேயே கழித்து விட்டேன். சிறை வாழ்க்கையைத் தொடர எனக்கு விருப்பம் இல்லை. அதனால் ஜீவ சமாதி அடைய அனுமதி தாருங்கள். ஜீவ சமாதி அடைய இருகின்றமையால் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் உணவுப் பொருள்கள் எவற்றையும் எடுத்துக் கொள்ளமாட்டேன்'- எனத் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில் மோதல்; பாடசாலைகள் பூட்டு!

காஷ்மீர் எல்லைப் பகுதியில் இந்திய- பாகிஸ்தான் படையினரிடையே மோதல்கள் நீடித்து வருகின்றன. இதனால், இந்தப் பகுதியில் உள்ள பாடசாலைகள் காலவரையறையின்றி மூடப் பட்டுள்ளன.

இந்த மோதல்களால் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பாடசாலைகள் பெருமளவில் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

எல்லைக் கட்டுப்பாடு தொடர்பில் கடந்த 2003 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி இந்திய- பாகிஸ்தான் துருப்புகளிடையே மோதல் நீடித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

# இந்தியாவில் முதன்முறையாக திருநங்கை நீதிபதியானார்!



இந்தியாவில் முதல் முறையாக மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த திருநங்கை ஒருவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொல்கத்தாவைச் சேர்ந்த ஜோயிதா மண்டல் என்பவரே இவ்வாறு நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் வட மாநிலங்களைச் சேர்ந்த திருநங்கைகள் பலர் எம். எல்.ஏ. மற்றும் உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் போன்ற பதவிகளில் இருந்து வருகிறார்கள்.

இந்த வரிசையில் தற்போது மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த திருநங்கை ஒருவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அங்குள்ள இஸ்லாம்பூர் மாவட்ட மக்கள் நீதிமன்றத்தின் (லோக் அதாலத்) நீதிபதியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முழு நாட்டிலும் திருநங்கை நீதிபதியாகி இருக்கின்றமை இதுவே முதல் முறையாகும்.

2009 ஆம் ஆண்டு இவர், கொல்கத்தாவில் இருந்து சிலிகுரி பகுதிக்கு ரயிலில் பயணம் மேற்கொண்டுள்ளார். ஆனால், இடம் தெரியாமல் உத்தர் தினாஜ்பூர் மாவட்டத்தில் உள்ள இஸ்லாம்பூரில் இறங்கி விட்டார். பின்னர் அங்கேயே அவர் நிரந்தரமாகத் தங்கியுள்ளார். அங்குள்ள திருநங்கைகளை ஒன்று திரட்டி சங்கம் ஒன்றை உருவாக்கினார்.

'தினாஜ்பூர் புதிய விளக்கு' என்ற பெயரில் உருவாக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் மூலம் பல வேறு சமூகப் பணிகளில் அவர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தீவிரவாதத்தை எதிர்ப்பதற்கு தவறி வருகிறது அமெரிக்கா!



## குற்றஞ்சாட்டுகிறார் ரஷ்ய வெளியுறவு அமைச்சர்

மொஸ்கோ, ஜூலை 24

உலகம் முழுவதும் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. ஆனால், தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்கா தவறுகிறது.

-இவ்வாறு ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் சேர்ஜி லவ்ரோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

சிரியாவில் இயங்கும் அல்-நுஸ்ரா பயங்கரவாதக் குழுவை எதிர்த்துப் போராட, சிரியா மற்றும் ஈராக்கில் செயற்பட்டுவரும் அமெரிக்க தலைமையிலான கூட்டணி தவறி வருகிறது. பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுகின்றமை தொடர்பில் முன்னாள் அமெரிக்கஜனாதிபதி பராக் ஒபாமா நிர்வாகத்துடன் ஒப்பந்தம் எட்டப்பட்டது.

ஆனால், அல்-நுஸ்ரா இயக்கத்தை எதிர்த்துப் போராட வொஷிங்டன் விரும்பாத நிலையில் இந்த உடன்பாடு முறியடிக்கப்பட்டது.-என்றார்.


சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் மோதல் நீடித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

# 99 ஆண்டுகளுக்கு பிறகு முழுச் சூரிய கிரகணம்!

99 ஆண்டுகளுக்கு பிறகு முழுச் சூரிய கிரகணம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி தோன்ற உள்ளது. மேலும், இந்தச் சூரிய கிரகணத்தை உலகம் முழுவதும் உள்ள 30 கோடி மக்களால் பார்க்க முடியும். ஆனால், இதைப் பொது மக்கள் வெறுங்கண்ணால் பார்க்கக் கூடாது என்று நாசா தெரிவித்துள்ளது.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் செல்லும் போது சூரிய கிரகணம் ஏற்படுகிறது. அது ஓர் அமாவாசை நாளில் ஏற்படும்.

## வெறுங்கண்ணால் பார்க்கக் கூடாது என நாசா எச்சரிக்கை



இந்த அரிய சூரிய கிரகணம் 99 ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றுகிறது.

அப்போது சூரியனை சந்திரன் முழுவதும் மறைத்து 3 நிமிடங்கள் வரை கிரகணம் ஏற்படும். இதனால், சூரியன் முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ மறைக்கப்படும்.

இந்தத் தகவலை 'நாசா' மையம் தெரிவித்துள்ளது. இது அமெரிக்காவில் 14 மாகாணங்களில் முழுமையாகத் தெரியும்.

இந்தக் கிரகணத்தை அதற்காகப் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ள சூரிய ஒளி தடுப்பு கண்ணாடிகளால் மட்டுமே பார்க்க வேண்டும்.

3 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகள் கிரகணக் கண்ணாடி அணிந்து பார்ப்பதும் பாதுகாப்பற்றது. இது பின் விளைவுகளை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (ச)

# ஆப்கானிஸ்தானில் கடத்தப்பட்டனர் 70 கிராமவாசிகள்!

## அவர்களில் 7 பேர் படுகொலை!!



காபூல், ஜூலை 24

ஆப்கானிஸ்தானில் தலைதூக்கியிருக்கும் பயங்கரவாதத்தின் பிரதிபலிப்பாக அந்த நாட்டின் காந்தஹர் மாகாணத்தில் வசிக்கும் 70 கிராமவாசிகள் கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காபூல் மற்றும் காந்தஹார் மனித உரிமை அமைப்புகள் உறுதி செய்துள்ளன.

ஆனால், இந்தக் கடத்தல் சம்ப வத்துக்கு இதுவரை எந்தத் தீவிர வாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இந்த நிலையில் நிலையில், அப்பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான்களே இந்தக் கடத்தல் சம்பவத்தை முன்னின்று நடத்தியிருக்கக் கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தற்போது உயிருடன் இருப்பவர்களை விடுவிக்கின்றமை தொடர்பில் அந்த நாட்டுப் படைகள் தீவிர தேடுதல் வேட்டையில் களமிறங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஜெருசலேம் தாக்குதல் தொடர்பில் துருக்கி ஜனாதிபதி கண்டனம்



இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் இஸ்லாமியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு துருக்கி ஜனாதிபதி தையீப் எர்டோகன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தொழுகைக்காக திரண்டிருந்த சகோதரர்கள் மீது இஸ்ரேல் அதிகப்படியான படைப் பலத்தை பிரயோகிக்கின்றமை கண்டிக்கத்தக்கது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ஜெருசலேம் நகரில் பாதுகாப்புப் பணியிலிருந்த இஸ்ரேலிய பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து இஸ்லாமியர்களின் மூன்றாவது புனித ஸ்தலமான அல் அக்சா மசூதிக்கு முன்னர் இஸ்ரேலியப் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாலஸ்தீனைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 3 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

இந்த நிலையில், மேற்படி சம்பவத்தைக் கண்டித்தே துருக்கி ஜனாதிபதி கண்டனம் வெளியிட்டுள்ளார். (ச)

# டயானாவுடனான இறுதி வார்த்தைகள்: மனம் திறந்தனர் இளவரசர்கள்!



டயானா உயிரிழந்த தினத்தில் அவருடன் தொலைபேசியில் கடைசியாகப் பேசியமை தொடர்பில் இளவரசர்கள் ஹரி மற்றும் வில்லியம் ஆகியோர் மனம் திறந்துள்ளனர்.

'நான் என் தாயிடம் என்ன பேசினேன் என நினைவில்லை. ஆனால், அவருடன் சிறிது நேரமே தொலைபேசியில் பேசினேன் என்பது என் வாழ் நாள் முழுவதும் வருத்தமாகவே உள்ளது'- என இளவரசர் ஹரி கூறியுள்ளார்.

வில்லியம் கூறுகையில், நாங்கள் மகிழ்ச்சியாக இங்கு இருக்கிறோம் என அம்மாவிடம் கூறினேன். ஆனால், அவசரத்தில் நானும் ஹரியும் 'குட்பை' அம்மா எனவும் பிறகு பேசுகிறோம் எனவும் அவரிடம் கூறினோம். அந்த துக்ககரமான சம்பவம் இடம்பெற்றபோது நாங்கள் இருவரும் ஸ்கொட்லாந்தில் உள்ள மகாராணியின் வீட்டில் இருந்தோம் . அம்மாவுடன் பேசிய கடைசி வார்த்தைகள் மனதில் அப்படியே பதிந்துவிட்டன. எங்கள் அம்மா டயானா அன்று இறந்து விடுவார் என முன்பே தெரிந்திருந்தால் அவசர அவசரமாக அவரிடம் சலித்துக் கொண்டு பேசியிருக்கமாட்டோம் எனக் கூறியுள்ளார்.

பிரித்தானியா இளவரசி டயானா கடந்த 1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதி கார் விபத்தில் பரிஸ் நகரில் உயிரிழந்தார்.

டயானா உயிரிழந்து 20 ஆண்டுகள் ஆகவுள்ள நிலையில் தனியார் தொலைகாட்சி ஒன்று (Diana Our mother her Life and Legacy) என்ற பெயரில் அவரைப் பற்றிய ஆவணப்படம் ஒன்றைத் தயாரித்துள்ளனர். இந்த ஆவணப்படம் இன்று வெளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கூட்டமைப்பின் தேர்தல்...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அன்றிரவு, வவுனியாவில் பூந்தோட்டப் பகுதியில், எமது இறுதிப் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பகுதியில் இருந்து புளொட் இயக்கத்தின் சார்பில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அந்தக் கூட்டம் எமக்கு முக்கியமானதாக விளங்கியது.

கூட்டம் நடைபெற்ற இடம், அதன் சுற்றுச் சூழல் என்பனவற்றின் அடிப்படையில், பாதுகாப்புத் தொடர்பில், எனது மெய்ப்பாதுகாவலர்களுக்கு, மிகத்தீவிரமான எதிர்க்கருத்துக்கள் இருந்த போதும், அவற்றை நிராகரித்து விட்டு கூட்டத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்தி முடித்தோம்.

அடுத்தநாள் யாழ்ப்பாணம் வந்து, தேர்தல் தினத்தன்று எதிரணியின் சட்ட விரோத நடவடிக்கைகளை, நண்பர் பிறேமச்சந்திரனைப் போலவே நானும் நேரடியாக எதிர்கொண்டேன்.

வாக்களிப்புச் சாவடி ஒன்று அமைந்திருந்த யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிச் சந்தியில், தமது அலுவலகத்துக்கு முன் திரண்டிருந்த, வாக்காளர்களுக்கு அச்சமூட்டும் விதத்தில் அட்டகாசமான நடவடிக்கைகளை அரங்கேற்றிக் கொண்டிருந்த எதிரணி ஆதரவாளர்களை, அங்கிருந்து விரட்டுமாறு நான் பொலிஸாரைக் கோரியும், போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அந்நிலையில் யாழ்ப்பாண தேர்தல் செயலகத்துடன் நான் தொடர்பு கொண்டேன்.

உடனடியாக தான் அங்கு வருவதாக அப்போதைய துணைத் தேர்தல் ஆணையாளர் (இப்போதைய ஆணையாளர்) மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தமையோடு, நான்கைந்து நிமிடங்களுக்குள் அங்கு வந்தும் சேர்ந்தார். நிலைமையை நேரில் அவதானித்த அவரின் உடனடி உத்தரவின் பிரகாரம் செயற்பட்ட பொலிஸாரினால், எதிரணியின் அலுவலகம் உடனடியாகப் பூட்டப்பட்டதோடு, அங்கு நின்ற அனைவரும் விரட்டி அடிக்கப்பட்டனர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பொழுது, யாழ்ப்பாணம் கைநழுவிப் போயிருந்தது. புத்தளத்தில் இருந்து வாக்களித்திருந்த யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் ஆதரவும், நல்லூர் தொகுதியின் பல இடங்கள் உட்பட, யாழ்ப்பாண நகரின் மேல் - மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் பெருமளவில் வாக்களிக்கத் தவறியமையும், கூட்டமைப்பின் எதிர்பாராத தோல்விக்கு காரணமாக இருந்தன.

ஆயினும், கூட்டமைப்பின் சார்பில் வெற்றி பெற்ற எட்டு வேட்பாளர்களில் யாழ்ப்பாண நகரின் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த ஐந்து பேர், சட்டத்தரணி றெமிடியஸ் உட்பட அடங்கியிருந்தனர். மிகுதி மூவரில் இருவர் எமது கட்சியினூடாக நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள்.

அதேநேரத்தில், வவுனியாவை நாம் மயிரிழையிலேயே வெற்றி கொண்டிருந்தோம். எமது அதிகப்படியான வாக்குகள் 131 மட்டுமே!

வவுனியாவில் சிவசக்தி ஆனந்தனுக்குத் துணையாக, இரண்டு கட்டங்களில், நானாகவே பிரசாரத்தில் ஈடுபட்டிருந்திராவிடில், தேர்தல் முடிவு எப்படி அமைந்திருக்கும் என்பதை ஊகிப்பது எவருக்கும் கஷ்டமானது அல்ல!

இவற்றை எல்லாம் நான் தெரிவிப்பதன் காரணம், கூட்டமைப்பின் சார்பில் எந்தவொரு அங்கத்துவக் கட்சியும், எந்தவொரு தேர்தல் வெற்றிக்கும் தனியாக உரிமை கோருவது, உண்மைக்கு புறம்பானது மட்டுமல்ல, தார்மீக ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாததும் ஆகும் என்பதாலேயே!

உண்மைகள் கட்டாயமாக வெளிவர வேண்டும். அதேநேரத்தில் அவை முழுமையாகவும் வெளிவர வேண்டும்.

(ந.ஸ்ரீகாந்தா)
செயலாளர் நாயகம்,
தமிழீழ விடுதலை இயக்கம்.

# 3 பந்துகளில் சிக்ஸர்கள் விளாசல்

## மீண்டும் மஞ்சள் உடை அணிவதில் மகிழ்ச்சி டி.என்.பி.எல். தொடக்க விழாவில் டோனி கருத்து



மஞ்சள் நிற உடையை அணிவதில் மகிழ்ச்சி அடைவதாக டி.என்.பி.எல். தொடக்க விழாவில் டோனி தெரிவித்துள்ளார்.

டி.என்.பி.எல். 2 ஆவது சீசன் போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று தொடங்கியது. முதல் ஆட்டத்தில் தூத்துக்குடி டூட்டி பேட்ரியாட்ஸ் - திண்டுக்கல் டிராகன்ஸ் அணி மோதியது. முன்னதாக ரசிகர்களை மகிழ்விக்கும் வகையில் சிக்ஸர் விளாசும் போட்டி நடைபெற்றது.

அதில் மகேந்திர சிங் டோனி மத்யூ ஹைடன் பத்ரிநாத் மோகித் சர்மா எல்.பாலாஜி அனிருத்தா ஸ்ரீகாந்த் கணபதி பவன் நெகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

டோனி உள்ளிட்ட அனைவரும் மஞ்சள் நிற ரி-சேர்ட் அணிந்திருந்தனர். சிக்ஸர் விளாசும் போட்டிக்கு முன்னதாக மைதானத்தை வலம் வந்த தோனியும் ஹைடனும் பார்வையாளர்கள் இருக்கையில் அமர்ந்திருந்த ரசிகர்களுக்கு மஞ்சள் நிற ரி-சேர்ட்களை வழங்கினார்கள்.

ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தடை முடிவுக்கு வந்துள்ளதை குறிக்கும் விதமாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது. அதை தொடர்ந்து நடைபெற்ற சிக்ஸர் விளாசும் போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்த ஹைடன்; 3 பந்துகளில் 2 சிக்ஸர்களை அடித்தார். தொடர்ந்து பந்து வீசும் இயந்திரம் மூலம் டோனி பந்துகள் வீசினார். அதில் அனிருத்தா 2 பத்ரிநாத் 2 பாலாஜி ஒரு சிக்ஸர் என்ற அடிப்படையில் சிக்ஸர்களை அடித்தார்கள். பவன் நெகி, மோகித் சர்மா ஆகியோர் அடித்த பந்துகள் எல்லைக் கோட்டைக் கூடத் தாண்டி விழ வில்லை. இறுதியாகத் துடுப்பெடுத்தாடிய டோனிக்கு இயந்திரம் மூலம் மோகித் சர்மா பந்துகளை வீசினார். அவர் வீசிய 3 பந்துகளையும் டோனி எல்லைக் கோட்டினைத் தாண்டிப் பறக்கவிட ரசிகர்களின் கரகோஷத்தால் மைதானமே அதிர்ந்தது.

அதைத் தொடர்ந்து தோனி கூறியதாவது:

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் சேப்பாக்கத்தில் துடுப்பாட்டம் செய்தேன். அதன் பின்னர் ஒருநாள் போட்டி உட்பட எந்தப் போட்டிகளிலும் நான் இங்கு விளையாடவில்லை. மீண்டும் இங்கு துடுப்பெடுத்து ஆடியது மகிழ்ச்சியாக உள்ளது. கடைசியாக இங்கு இந்திய அணி கடந்த ஆண்டு இறுதியில் டெஸ்ட் போட்டியில் விளையாடியது. ஆனால், அதில் நான் இடம்பெறவில்லை. சென்னை ரசிகர்கள் எப்போதுமே நிபந்தனையற்ற ஆதரவு வழங்கக்கூடியவர்கள்.

இங்கு தான் நான் டெஸ்ட் போட்டியில் அறிமுகமானேன். 8 வருடங்களாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி உள்ளேன். மீண்டும் மஞ்சள் நிற உடையை அணிவது மகிழ்ச்சியாக உள்ளது. இந்திய அணிக்கான நீலநிற உடை போன்று மஞ்சள் நிறமும் கடந்த 8 ஆண்டுகளாக சிறப்பு வாய்ந்ததாக காணப்படுகின்றது.

டி.என்.பி.எல். போட்டிகளை முழுவதுமாக நான் பார்த்தது இல்லை. ஆனால் அதன் சிறப்பம்சங்கள் அடங்கிய தொகுதியை பார்த்துள்ளேன். தமிழக அளவில் நடத்தப்படும் இந்தத் தொடர் இளம் வீரர்களுக்கு சிறந்த அடித்தளமாக அமைந்துள்ளது.

இந்தத் தொடரின் மூலம் சிறந்த வீரர்களை தமிழகம் உருவாக்குகிறது. அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் விளையாடும் போது வீரர்கள் அதிகம் கற்றுக்கொள்கின்றார்கள். முதல்தர போட்டிகளில் அவர்கள் தங்களது திறனை அதிகரித்துக் கொள்ளவும் உதவியாக உள்ளது. சிறப்பாக விளையாடும் வீரர்கள் ஐ.பி.எல். தொடருக்கு தேர்வு செய்யப்படுவது கூடுதல் சிறப்பு என்று தெரிவித்துள்ளார்.

## 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றார் போல்ட்




மொனாக்கோவில் நடைபெற்ற டைமண்ட் லீக் தடகள போட்டியின் 100 மீற்றர் ஓட்டத்தில் யமேக்கா வீரர் உசேன் போல்ட் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

பந்தயத்தூரத்தை அவர் 9.95 வினாடிகளில் கடந்தார். அமெரிக்காவின் ,சியாயங் 9.98 வினாடிகளுடன் 2ஆம் இடத்தையும் தென் ஆபிரிக்காவின் அகானி சிம்பைன் 10.02 வினாடிகளில் கடந்து 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

லண்டனில் அடுத்த மாதம் நடைபெற உள்ள உலகத் தடகள போட்டியுடன் ஓய்வுபெற உள்ள உசேன்போல்ட்ஐரோப்பிய விளையாட்டுப் பருவ காலத்தில் பங்கேற்ற 2-வது போட்டி இதுவாகும்.

ஒலிம்பிக்கில் 9 தங்கம் உலக தடகள போட்டியில் 11 தங்கம் வென்றுள்ள உசேன்போல்டின்மின்னல் வேக ஓட்டத்தைக் காண மொனாக்கோமைதானத்தில் 17 ஆயிரம் ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

வெற்றி குறித்து உசேன் போல்ட் கூறும்போது 'மீண்டும் ஒரு முறை 100 மீற்றர் ஓட்டத்தை 10 வினாடிகளுக்குள் கடந்தது சிறப்பான விடயம் ஆகும் என்று தெரிவித்துள்ளார்.

சரியான திசையில் நான் சென்று கொண்டிருக்கிறேன் எனினும் இன்னும் அதிக வேலை செய்ய வேண்டி உள்ளது. 10 வினாடிகளுக்குள் இலக்கை கடப்பது எப்போதுமே சிறந்தது தான். எனது தடகள வாழ்க்கை இதுவரை மகிழ்ச்சியாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் அது நிறைவடையப் போகின்றது என் பதனைச் சோகமாக உணர்கிறேன்' என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir



# வவுனியா மாவட்ட 29ஆவது ,இளைஞர் விளையாட்டு விழா








வவுனியா மாட்டத்தின் 29ஆவது விளையாட்டு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளன.

இந்த நிகழ்வுகள் வவுனியா மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் சுந்தரலிங்கம் காண்டீபன் தலைமையில் இடம்பெற்றன.

இதில் பிரதம அதிதியாக வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளும் கௌரவ அதிதிகளும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இவ் வருட விளையாட்டு நிகழ்வில் பரிசளிப்பு நிகழ்வும் மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகளும் இடம் பெற்றுள்ளன. இந்தப் போட்டிகளில் 786 இளைஞர் கழகம் எதிர் அல் இக்பால் இளைஞர் கழகங்கள் மோதிக் கொண்டதுடன் தடகள மற்றும் பெரு விளையாட்டு விழாக்களின் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றுள்ளன.

## பிரச்சினையை எழுப்ப விரும்பவில்லை அமைச்சர் தயாசிறி கூறுகிறார்





இந்திய அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள நிலையில் 2011உலகக்கிண்ண பிரச்சினையை எழுப்ப விரும்பவில்லை என இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தியா-இலங்கை மோதிய 2011 உலக கிண்ண இறுதிப்போட்டி ஆட்ட நிர்ணயம் செய்யப்பட்டது என்பதற்குத் தேவையான அனைத்து ஆதாரங்களையும் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க வழங்கினால் விசாரணைக்கு உத்தரவிடத் தயார் என தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் தெரிவிக்கும் போது இந்திய அணி இலங்கையில் உள்ள நேரத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்ப இலங்கை விரும்ப வில்லை. ஆனால், ஆதாரங்கள் அளிக்கப்பட்டு ரணதுங்க எழுத்து பூர்வ மாக முறைப்பாடு அளிக்க முன்வந்தால் விசாரணைக்கு உத்தரவிடப் படும். இந்த நேரத்தில் இலங்கை அணிக்கும் தொந்தரவு கொடுக்க நாங்கள் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## ஐ.பி.எல்லின் தலைமைச் செயல் அதிகாரியாக ஹேமங் அமீன் நியமனம்: பி.சி.சி.ஐ. அறிவிப்பு

INDIAN PREMIER LEAGUE

ஐ.பி.எல். கிரிக் கெட் தொடரின் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக ஹேமங் அமீன் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது. ஐ.பி.எல். தொடங்கப்பட்ட 2008ஆம் ஆண்டிலிருந்தே சி.ஓ.வாக இருந்து வந்தவர் சுந்தர் ராமன். 2013ஆம் ஆண்டு ஐ.பி.எல். சர்ச்சையின்போது சுந்தர்ராமன் பெயர் அடிபட்டது. அவர் பதவி விலக நெருக்குதல்களும் ஏற்பட்டன. இந்த சர்ச்சை தொடர்பாக கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுந்தர் ராமன் பதவி விலகினார். அவருக்குப் பின் அந்த பதவி நிரப்பப்படாமல் காலியாக இருந்தது.

இந்நிலையில், புதிய தலைமைச் செயல் அதிகாரியாக ஹேமங் அமீனை நியமிப்பதாக பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. ஹேமங் கடந்த 7 வருடங்களாக பி.சி.சி. ஐ.யில் பல முக்கியப் பொறுப்புகளை வகித்த இவர் பி.சி.சி.ஐ. தொடர்பான நிகழ்ச்சிகளில் துரிதமாகச் செயல்பட்டு வந்தார்.

தற்போது நிதி பிரிவு துணை பொது மேலாளராக இருக்கும் அவருக்கு தலைமை செயல் அதிகாரி ஆகும் வாய்ப்பு கிடைத்துள்ளது. புதிதாக பதவியேற்க உள்ள ஹேமங் ஐ.பி.எல். தொடரில் பல புதுமைகளைப் புகுத்தி திறம்பட செயல்படுவாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## சென்னை எனது இரண்டாவது தாய்வீடு மோகித் சர்மா உருக்கம்




தமிழ்நாடு பிரீமியர் லீக் தொடரின் இரண்டாவது பருவ காலம் நேற்று தொடங்கியது. முதல் போட்டியில் திண்டுக்கல் அணியை தூத்துக்குடி அணி வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்திருந்தது.

போட்டியின் ஆரம்ப விழாவில் சென்னை அணியின் கப்டன் மகேந்திர சிங் டோனி ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மேத்யூ ஹைடன் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மோகித் சர்மா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போட்டி ஆரம்பத்தில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய மோகித் சர்மா சென்னை தனது இரண்டாவது தாய்வீடு என்று தெரிவித்துள்ளார். மேலும் அவர் பேசுகையில் சி.எஸ்.கே. அணிதிரும்பிவந்தது மகிழ்ச்சி அளிக்கின்றது. ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக முதல் 4 தொடர்களில் விளையாடி உள்ளேன். சென்னை அணிக்காக நான் செலவிட்ட ஒவ்வொரு கணமும் எனக்கு முக்கியமான அனுபவம் ஆகும்.

தமிழகத்தின் நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள இளம் வீரர்கள் வெளியே தெரிவதற்கு டி.என்.பி.எல். மிகப்பெரிய வாய்ப்பு. டி.என்.பி.எல் தொடரின் புகழ் மெல்ல மெல்ல வளர்ந்து ஐ.பி.எல். போல் நிச்சயம் மாறும். டி.என்.பி.எல். தொடரில் பெற்ற புகழ் மூலம் ஐ.பி.எல் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் டி.நடராஜனுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

## இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு மணற் சிற்ப வாழ்த்து!




மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டிக்கு இந்திய அணி முன் னேறியதற்கு வாழ்த்துத் தெரிவித்து மணற்சிற்பம் ஒன்றை அமைத்து அதன் மூலம் தனக்கே உரிய பாணியில் சுதர்சன் பட்நாயக் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

11- ஆவது மகளிர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடந்து வருகிறது. இதில் அரை இறுதிப் போட்டியில் இந்திய அணி நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலிய அணியை வீழ்த்தியது. இதன் மூலம் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளதைக் கௌரவிக்கும் முகமாகவே இம் மணற் சிற்பத்தை உருவாக்கியுள்ளேன் என சுதர்சன் பட்நாயக் தெரிவித்துள்ளார்.

## சட்டத்தரணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான குற்றவாளியைக்கைதுசெய்யநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத் தப்பட்டுள்ளது.

வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் இது தொடர்பாக தெரிவிக் கையில் –

நீதிபதி மீதான துப்பாக்கி பிரயோகம் மிலேச்சத்தனமான செயற்பாடாகும். நல்லாட்சி அரசியல் இவ்வாறான செயற் பாடுகள் இடம்பெறுவதை நாம் கண்டிக்கிறோம்.

இதுஇலங்கைநீதித்துறைக்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய அச்சு றுத்தலாகும். இதைக்கண்டித்து திங்கட்கிழமைபணிப்பகிஷ்கரிப் பில் ஈடுபடவுள்ளோம். இதன் போது வடக்கில் உள்ள சமூகம் சார் அமைப்புகள், சமூக அக்க றைகொண்ட சங்கங்களையும் எம்முடன் இணைந்து ஒத்து ழைப்புவழங்குமாறு கோருகின் றோம். – எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம)

## மெய்க்காவலரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிபதிஇளஞ்செழியன், அவரது காலில் முன்னால் மண்டியிட்டு அழுது வணங்கினார். பின்னர் விம்மி அழுதபடி தமது துய ரத்தை ஹேமரத்தினின் மனை வியுடன் அவர் பகிர்ந்து கொண் டார்.

உயர்பதவியிலிருக்கும் ஒரு மேல் நீதிமன்ற நீதிபதி தமது மெய்க்காவலருக்காக பலர் முன்னிலையில்கண்ணீர்விட்டு விம்மி அழுதமை அங்கிருந்த பலரின் மனதையும் நெருட வைத்தது.

இந்த விடயத்தை சமூக ஊடகங்கள், வலைத்தளங்கள், தொலைக்காட்சியில் பார்த்த பலரும் அத்தகைய நெகிழ்ச் சியான கருத்துப் போக்கைப் பகிர்ந்து கொண்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

பிரேத ஒப்படைப்பு நிகழ்ந்த பின்னர், மேற்படி சம்பவத்தில் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்தி ரியில்சிகிச்சைபெற்றுவரும்மற் றைய மெய்க்காவலரைப் பார்வையிட்ட நீதிபதி, அவரைக் கட்டித் தழுவி ஆறுதல் வார்த் தைகள் கூறினார். அப்போதும் நீதிபதி இளஞ்செழியன் கண் ணீர் விட்டு அழுதமையைக் காண முடிந்தது. (உ)

## தாக்குதலாளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோரமாககைவிடப்பட்டநிலையில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நீதிபதியின் மெய்ப்பாதுகாவ லர்களான பொலிஸாரில் ஒரு வரின் பிஸ்டலைப் பறித்து இரு பொலிஸாரையும்சுட்ட அந்நபர், அந்த வீதியால் தம்பதியாகப் பயணித்தவர்களின் பெண் களுக்கான மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பறித்துக்கொண்டு அதில் தப்பிச் சென்றார்.

அவர் கொண்டு சென்ற மோட்டார்சைக்கிள் அரியாலை பகுதியில் நேற்றுக் காலை மீட் கப்பட்டது.

இந்த நபர் பொலிஸாரிடம் பறித்த பிஸ்டல் நேற்றுமுன் தினம் உடனடியாகவே ஆலய வீதியில் மீட்கப்பட்டது. எனினும் அதன்மகஸீன் அன்றுநள்ளிரவு நல்லைதிருஞானசம்பந்தர்ஆதீ னத்திற்கு அருகாமையில்உள்ள கழிவுநீர் ஓடும் வாய்க்காலில் இருந்து மீட்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நீதிபதி மீதான கொலை முயற்சிக்கு சைவ மகா சபை கடும் கண்டனம்

## பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரிக்கை

திருகோணமலை, ஜூலை 24

யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதிமா.இளஞ்செழியன்மீதான கொலை முயற்சிக்கு அகில இலங்கை சைவமகாசபைகடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக சைவ மகா சபையின் தலைவர் தவத்திரு அகத்தியர் அடிகளார் நேற்று மாலை விடுத்துள்ள அறிக்கை யில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு, கிழக்கின் பல பிரதே சங்களிலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் கடந்த காலத்தி லும் நிகழ்காலத்திலும் காத்திர மான செயற்பாடுகளைமுன்னெ டுத்தநீதிபதிமா. இளஞ்செழியன் சைவத்தமிழ் மக்களின் வணக் கத்தலமானநல்லூர்கந்தசுவாமி ஆலய வீதியில், கொலை முயற் சிக்கு உள்ளாக்கப்பட்டமை நீதி யை நேசிக்கும் சகலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக் கின்றது.

இந்நிலையில், அரசு உடனடி யாக நீதிபதிக்கு அதி உயர்ந்த பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும் குற்றவாளிகளை சட்டத் தின் முன் நிறுத்த காத்திரமான சகலநடவடிக்கைகளையும்மேற் கொள்ள வேண்டும் எனவும் கேட் டுக் கொள்கின்றோம்.

அத்துடன், நீதிபதியைப் பாது காக்க உயிர்த் தியாகம் செய்த மெய்ப்பாதுகாவலரது ஆத்மா சாந்தியடையவும் மற்றைய பாது காவலர் விரைவில் குணமடைய வும்பிரார்த்திக்கின்றோம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பொலிஸ் உத்தியோகத்தர் ஹேமச்சந்திரவுக்கு இன்று நல்லூரில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதியில்நேற்று முன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காய மடைந்து பின்னர் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஹேமச்சந்திரவுக்கு இன்று நல் லூரில் அஞ்சலி செலுத்தப்பட வுள்ளது.

இன்றுமாலை5.45மணிக்கு நல்லூர் ஆலய வீதியில் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெறும் எனவும்அதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும்ஏற்பாட் டாளர்கள் கேட்டுக் கொண்டுள் ளனர். (ம)

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்சம்பவத்தைஅடுத்து, சகலநீதிபதிகளினதும்பாதுகாப் புத் தொடர்பிலும் விசேட நிகழ்ச் சித்திட்டம்ஒன்றைநடைமுறைப் படுத்துமாறு பொலிஸ் மா அதி பருக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார் எனக் கூறப் படுகின்றது.

விசேடபொலிஸ்குழுக்களை அமைத்து இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசார ணைகளை உடனடியாக மேற் கொள்ளுமாறுபொலிஸ்மாஅதி பருக்கு அவர் உத்தரவும் வழங் கினார்.

மேற்படி பொலிஸ் அதிகாரி யின் மறைவையிட்டு அவரது குடும்பத்தவர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்த ஜனாதிபதி, கடமை யைச் சரியாகச் செய்கின்ற இத் தகைய அதிகாரிகள் முழு பொலிஸ்திணைக்களத்துக்கும் முன்னுதாரணமாவார்கள் என் றும் புகழாரம் சூட்டினார்.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் விரை வாகக் குணமடையவும் தான் பிரார்த்திக்கின்றார் என்றும் ஜனாதிபதிமேலும்தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த பொலிஸ் அதிகாரி ஹேமரத் னவுக்குபிரதமர்ரணில்விக்கிரம சிங்கவும் இரங்கலைத்தெரிவித் திருக்கின்றார்.

தனது உத்தியோக பூர்வ டுவிட்டர்தளத்தில் அவர் இதைப் பதிவேற்றியுள்ளார்.

‘பணியிலிருக்கும் போது சார்ஜன்ட் உயிரிழந்துள்ளமை கவலைக்குரிய விடயமே. இந்த நேரத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்குஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.’ – எனப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

## நீதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது தமது கவலையைத் தெரி வித்துள்ளார். மெய்க் காவ லின் மரணம் தொடர்பில் நீதி பதிக்கு அவர் ஆறு தல் சொன் னார்.

நீதிபதி இளஞ்செழியனுக்கு தொலைபேசிமூலம் அழைப்பை ஏற்படுத்திக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதிபதி இளஞ்செழியனின் பாது காப்பை உறுதிப்படுத்தும் விதத் தில் அதை அதிகரிக்குமாறுதாம் உத்தரவிட்டுள்ளமையையும் அவருக்குத்தெரியப்படுத்தினார் என அறிய வந்தது. (உ)

## இளஞ்செழியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரனிஸ்லஸ் கனிஸ்டனும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை –

நீதிபதி இளஞ்செழியன் விசாரணைசெய்யும்எந்தவழக் குத் தொடர்பிலான விடயமும் இந்தத்துப்பாக்கிச்சூட்டுச்சூட்டுச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல என்பது விசாரணைகள் மூலம் உறுதியாகியுள்ளது என வும்பொலிஸ்ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட யாழ். பிராந் திய சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் ஸ்ரனிஸ்லஸ் –

நீதிபதியின் மெய்பாதுகாவ லரான பொலிஸ் உத்தியோ கத்தர் அங்கு மது போதையில் இருந்தவரை கண்டிப்பதற்காக எடுத்த நடவடிக்கை காரணமா கவே இந்த சம்பவம் நடைபெற் றுள்ளது என தற்போது என் னால் சொல்ல முடியும்.

நீதிபதிக்கு உயிர் அச்சுறுத் தல் இருந்தால், நிச்சயமாக அவ ரது வாகனத்திற்கு சூடு பட்டிருக்க வேண்டும். அப்படி எதுவும் நடை பெறவில்லை. நீதிபதியும் வாக னத்தை விட்டு கீழே இறங்கி தனது மெய்ப்பாதுகாவலரும், மதுபோதையில் நின்ற நபரும் முரண்பட்டுகொண்டதை பார்த் துள்ளார்.

இந்நிலையில், துப்பாக்கி தாரியின் இலக்கு நீதிபதியாக இருந்திருந்தால் அவரை நேரா கச் சுட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு அவர் சுடவில்லை. எனவே இது நிச்சய மாக அந்த சந்தர்ப்பசூழலில்நடந்தவிடயமே தவிர, நீதிபதியை இலக்குவைத்த விடயம் அல்ல. – எனத் தெரிவித் துள்ளார்.

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“இந்தப் பேச்சுக்கள் திருப்திகர மானவையாகவும் சுமுகமான வையாகவும்புரிந்துணர்வுமிக்க வையாகவும் அமைந்தன” – என்றார் இரா.சம்பந்தன்எம்.பி.

கொழும்புஇசுப்பத்தான வீதி யில்உள்ளசிரேஷ்டசட்டத்தரணி கனகேஸ்வரனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நேற்றைய சந்திப்பின் பின் னர்சம்பந்தன், விக்னேஸ்வரன் இருவர்சார்பில்கூட்டு அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டது.

அதன் விவரம் வருமாறு –

இன்று (23.07.2017) எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பின் தலைவரு மான இரா.சம்பந்தனும் வட மாகாண முதலமைச்சர் நீதியர சர்க.வீ.விக்னேஸ்வரனும்கொழும் பில் சந்தித்து கூடிப் பேசினார் கள்.மற்றையவிடயங்களுடன்வட மாகாணசபையின்தற்போதைய நிலைமையும்பரிசீலிக்கப்பட்டது.

அங்குஎழுந்துள்ளநிலைமை பற்றி முடிவுகளை எடுக்க முன் பதாக தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் எல்லாக்கட்சித்தலை வர்களுடனும் பேசவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் எல்லாக் கட்சித் தலைவர்களை யும் சந்திப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அதுவரையில் வடமாகாண சபையில் முன்மொழியப்பட்ட பிரேரணைகள் உட்பட சபையில் எழும் ஏனைய முரண்பாட்டுக் கமைவதான கருமங்கள் பிற் போடப்படுவது தேவை என்றும் இணக்கம் காணப்பட்டது.

– இப்படி அதில் தெரிவிக்கப் பட்டது.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் எல்லாக் கட்சித் தலைவர் களையும் சந்திப்பது என்று முடிவுசெய்திருக்கின்றீர்கள். அந்தச் சந்திப்பு எப்போது நிக ழும்?” – என்று நேற்றிரவு சம் பந்தனிடம் கேட்டபோது –

“மிக விரைவில்!” – என்று பதில் தந்தார் சம்பந்தன்.

## என்னைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ிருந்த நீதிபதி இளஞ்செழியன் உயிரிழந்த தமது மெய்ப்பாது காவலரின் உறவினர்களை அங்கு சந்தித்த பின்னர் ஊடக வியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது மெய்ப்பாதுகாவலர் வவுனியாவில் உச்ச ஆயுதப் போராட்டம் நடைபெற்ற காலப் பகுதியிலும், திருகோணமலை யில் கடமையாற்றிய போதும், கொழும்பு, கல்முனை என தற் போது யாழ்ப்பாணத்திற்கு நான் இடமாற்றம்பெற்று வந்தபோதும் என்னுடைய மெய்ப்பாதுகா வலராக கடந்த 15 வருடங்களாக இருந்தார்.

வவுனியாவில் மிகவும் உச்ச அச்சுறுத்தல் காணப்பட்ட காலத் தில் என்னை விட்டு சற்றும் வில காமல் என்னுடனேயே இருந்து எனக்கு முழுமையான பாது காப்பை தந்திருந்தார். என்னு டைய உயிரைப் பாதுகாப்பதற் காக இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்களுடன் சண்டை யிட்டு உயிரிழந்துள்ளார். மற்றை யவரும் என்னைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டதால் படுகாயம டைந்துள்ளார்.

அச்சுறுத்தல் இருந்த காலக் கட்டத்தில் அவருடைய உயிர் போகவில்லை. ஆனால் யாழ்ப் பாணம் அமைதியாக இருக்கும் போது, அனைத்துக் குற்றங் களும்கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வந்திருக்கும் இந்த சமயத்தில் துப்பாக்கிச்சூட்டில் அவர் இறந் தமை வருத்தத்திற்குரியது, கவ லைக்குரியது. – என்றார்.

## கொல்லப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

கடந்த 18 ஆண்டுகளாக நீதி பதி இளஞ்செழியனின் மெய்க் காவலராகப் பணியாற்றி வந்த ஹேமச்சந்திர சிலாபத்தைச் சேர்ந்தவர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் அவரதுபூதவுடல்அவரதுஉறவி னர்களிடம் கையளிக்கப்பட்ட மையை அடுத்து அது சிலாபத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நாளை சிலாபத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சூத்திரதாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் இயக்கத்தில் செயற்பட்டவர் என்று கூறப் படுகின்றது.

1999 இல் வன்னிவிளாங் குளம் பகுதியில் திருமணம் முடித்தவர். அந்தத் திருமணம் மூலம் இவருக்கு நான்கு பிள் ளைகள் உள்ளனர்.

பின்னர் 2003 முதல் இன் னொரு இளம் பெண்ணு டன் மண்கும்பான் மற்றும் புங்குடு தீவுப் பகுதியில் குடும்பம் நடத்தி வருபவர். அந்தப் பெண் மூலம் மூன்று குழந்தைகளுக் குத் தந்தை.

2003 ஐ ஒட்டிய காலப் பகுதி யில் ஐஸ்கிறீம் வான் செலுத்தி யவர். அண்மைக் காலம் வரை குறிகாட்டுவான் – யாழ்ப்பாணம் தனியார் பஸ் சாரதியாகவும் செயற்பட்டவர்.

முதல் மனைவி நீதிமன்றத் தில் வழக்குத் தாக்கல் செய்த மையால் தாபரிப்புப் பணம் செலுத்திவருபவர்எனக்கூறப்ப டுகின்றது.

கோப்பாய் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட திருநெல்வே லிப் பகுதியில் 2012 செம்டெம் பரில் பிரபா என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர் பில்கைதுசெய்யப்பட்டுவிளக்க மறியலில் வைக்கப்பட்ட நிலை யில் தற்போது யாழ்.நீதி மன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவர் என் றும் கூறப்பட்டது.

நேற்று முன்தினம், சம்பவ சமயம் தமது சகோதரர் ஒருவ ருடனும், மைத்துனர் ஒருவரு னும்நல்லூர்ப்பகுதியில்நின்று சிலருடன் அவர் சச்சரவுப்பட் டுக் கொண்டிருந்தார் என்றும், அச்சமயம் அவர் சற்று போதை யில் காணப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

தமது சகோதரருக்கு நல் லூரில் ஒட்டோ தரித்து சேவை யில் ஈடுபட அனுமதி மறுக்கப் பட்டதாகக் குறிப்பிட்டே அவர் சிலருடன் இழுபறிப்பட்டாராம்.

அச்சமயம், நீதிபதியின் வாகனத்துக்குப் பாதுகாப்பாக முன்னால்வந்தமெய்க்காவலர் ஹேமச்சந்திர இவரின் அட்டகா சத்தைஅவதானித்து, மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி, அவரை அங்கிருந்து அப்புறப் படுத்தி, நீதிபதியின் வாகனத் துக்கு வழி ஏற்படுத்த முயன்ற சமயம் மேற்படி துர்ப்பாக்கிய சம்பவம் – துப்பாக்கிச் சூட்டு மோதல் – நேர்ந்ததாக விடய மறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மேற்படிநபர்தலைமறைவா கியுள்ளார். அவரைப் பொலி ஸார் தேடி வருகின்றனர். அவ ரின் சகோதரரும், மைத்துன ருமே பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு, அங்குதடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# ஆடிப்பூர விழா

தெல்லிப்பழை, ஜூலை 24

தெல்லிப்பழை ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய ஆடிப்பூரம் மஹாசண்டி ஹோமப்பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் புதன் கிழமை காலை 6 மணிக்கு சண்டி ஹோமம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு விசேட பூசை மற்றும் வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார். (இ)

★★★

சாவகச்சேரி, ஜூலை 24

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆடிப்பூர சாந்தி விழா நாளைமறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பூசை வழிபாடுகள் மற்றும் ருது சாந்தி விழாவுடன் திரு வூஞ்சல் என்பன இடம்பெறும். மாலை 5 மணிக்கு விசேட பூசை மற்றும் வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். (இ)

★★★

வட்டுக்கோட்டை, ஜூலை 24

வட்டுக்கோட்டை தெக் கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூரத்திருவிழாவும் மகா சங்காபிஷேக உற்சவமும் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாக வுள்ளன.

அன்றைய தினம் கண்ணகி அம்மனுக்கும்கண்ணலிங்கேஸ்வரப் பெருமானுக்கும் நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் கண்ணாம்பிகாதேவிக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் இடம்பெற்று தொடர்ந்து ஆடிப்பூர ருது சாந்தி வைபவமும் இடம்பெறும். (இ)

# வலிதூண்டல் றோ.க.த. பாடசாலையின் 207 ஆவது ஆண்டு விழா

தெல்லிப்பழை, ஜூலை 24

கீரிமலை வலிதூண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் 207 ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு பாடசாலை அதிபர் யோ.ஸ்டெனிஸ்லாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி தூண்டல் பங்குத் தந்தை பீ.பிறைன் அடிகளார் கலந்துகொள்வார். (இ)

# நிபுணத்துவம் பெற்றவரின் ஆலோசனையுடன் இனி மன்னாரில் மலேரியா நுளம்பு ஒழிப்பு!

## நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பு

மன்னார்தீவு பகுதிக்குள் மலேரியாவை தோற்றுவிக்கின்ற ஒரு புதுவிதமான நுளம்பு இனம்கண்டுபிடிக்கப்பட்டதால் இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கையை உலக சுகாதார ஸ்தாபனத்தில் சேவை செய்கின்ற நிபுணத்துவம் கொண்ட ஒருவரை அழைத்து வந்து ஆராயப்பட்டபின்பே நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தலைமையில் இடம் பெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மலேரியா நோய் தற்பொழுது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டிருக்கும் இந் நிலையில் மன்னார் பகுதியில் அதாவது மன்னார் தீவில் மலேரியாவைப் பரப்பக்கூடிய ஒரு புது வகையான நுளம்பு இனம் காணப்பட்டது எனத் தெரிவிக் கப்பட்டது. இதை அழிக்க கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த மலேரியா தடுப்பு இயக்கம், இந்தப் பகுதியிலுள்ள கிராமங்கள் தோறும் இதற்கான நடவடிக்கையை கடந்த 10 ஆம் திகதி முதல் மேற்கொண்டு வருகின்றது.

இந்தநிலையில், கிணறுகள், நீர் நிலங்கள் போன்றவற்றில் இந்த இயக்கத்தினர் இரசாயனத்தை கொட்டி எமது பிரதேச குடிதண்ணீர், நிலம், வளி போன்றவற்றை மாசு படுத்துவதை நாம் விரும்பவில்லை என மன்னார் நகர்பகுதியைச் சேர்ந்த சிலர் எதிர்ப்புத் தெரிவித் தனர்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் இவர்கள் நடத்தி இருந்தனர்.

இதனையடுத்தே, இரசாயன நிபுணர்களின் ஆலோசனை பெறப்பட்ட பின்பே இந்த நடவடிக்கை தொடரும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. (112)

# பிரிகேடியர் உட்பட இராணுவ சிப்பாய்கள் முருங்கன் வைத்தியசாலையில் இரத்ததானம்!





பிரிகேடியர்உட்பட150இற்கு மேற்பட்ட இராணுவசிப்பாய்கள் மன்னார் முருங்கன் வைத்திய சாலையில் இரத்த தானம் வழங்கியுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு இரத்தம் அதிகளவு தேவைபடுவதை முன்னிட்டு மன்னார் பகுதியில்பொதுமக்கள்அண்மை காலமாக இரத்ததானம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் மன்னார் முருங்கன் பிரதேச வைத்திய சாலை வைத்திய அதிகாரி சிங்கராயர் பிரசன்னா விடுத்த வேண்டு கோளுக்கிணங்க மன்னார் மாதோட்டம் 542 ஆவது படை யணி இராணுவ முகாமிலிருந்து பிரிகேடியர் என்.பிரசாத் அக் குரன்திலக்க தலைமையில் 150 இற்கு மேற்பட்ட இராணுவச் சிப்பாய் களும் பொது மக்கள் உட்பட இருநூறு பேர் அளவில் முருங்கன் வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கினர்.

நேற்றுத் தொடக்கம் நடைபெற்ற இந்த இரத்ததானம் வைத்தியர்கள் சிங்கராயர் பிரசன்னா, ஹர்சனி தேவராஜா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே மன்னார் மாதோட்டம் 542 ஆவது படையணி இராணுவ முகாம் பிரிகேடியர் என்.பிரசாத் அக்குரன்திலக் கவும் தனது பாரியார் சகிதம் சென்று இந்த இரத்ததான வழங்கல் முகாமில் இரத்த தானம் வழங்கியுள்ளார்.

தனது வாழ்க்கையில் முதல் முதலாக வழங்கும் இரத்ததானம் என பிரிகேடியர் என்.பிரசாத் அக்குரன்திலக்க இதன்போது தெரிவித்துள்ளார். (க-112)

# காணாமற் போனோர் தொடர்பாக ஆராயும் அலுவலகம் ஆபத்தானது!

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதியால் கைச்சாத்திடப்பட்ட காணாமற்போனோர் தொடர்பாக ஆராயும் அலுவலகம் அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணானது.

அத்துடன், இந்தக் காரியாலயம் நீதிமன்றம் போன்று செயற்படும் ஆபத்து இருக்கின்றது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ரயன் ஜயலத் கைதை தடுத்தவர்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 24

மருத்துவப் பீடத்தின் மாணவர் செயற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத் என்ற மாணவன், நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கு ஒன்றுக்காகத் தேடப்படும் நபர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தேகநபரை கைது செய்ய முயற்சித்தபோது அதற்குத் தடையேற்படுத்தியவர்கள் சம்பந்தமாக விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ரயன் ஜயலத் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியமை மற்றும் வேறு ஒரு வழக்கு சம்பந்தமான விசாரணைகளுக்கு நீதிமன்றத்தில் நேர்நிலையாகவில்லை. இதனால், நீதிமன்றம் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி ரயன் ஜயலத்தைக் கைது செய்ய முயற்சித்த போது அங்கு ஏற்பட்ட நிலைமை தொடர்பாக காணொலி பதிவுகளை ஆய்வு செய்து வருவதாகவும் இதற்கு மேலதிகமாக மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் விசேட விசாரணை ஒன்றையும் முன்னெடுத்துள்ளோம் எனவும் ருவான் குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

# நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **கிளிநொச்சிபிரதேசத்தில்** கௌதாரிமுனை, சிலாவத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (இ)

# விழிப்புணர்வு ஆற்றுகை

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.மாவட்ட தேர்தல்கள் அலுவலகமும், ராகஸ்வரம் கலை மன்றமும் இணைந்து நடத்தும் வாக்காளர் பதிவு தொடர்பானவிழிப்புணர்வு ஆற்றுகை இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறும். (இ)

# ஆலய உற்சவங்கள்

கோப்பாய், ஜூலை 24

கோப்பாய் ஸ்ரீ பாலனை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்தோற்சவமும் இடம் பெறும். (இ)

★★★


குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (இ)

★★★

தென்மராட்சி மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

திருவிழா தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும். (இ)




# நல்லூரில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த ஹேமச்சந்திரவின் சடலம் சொந்த ஊருக்கு

## வடக்கு நீதிபதிகள் குழாம் கொண்டுசென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜண்ட் ஹேமச்சந்திரவின் (வயது-51) சடலம் நேற்று அவரது சொந்த ஊரான சிலாபம் – சின்னவத்தைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உட்பட வடக்கு மாகாண நீதிபதிகள் குழாம் பொலிஸ் சார்ஜண்டின் சடலத்தை அவரது இல்லத்திற்குக் கொண்டு சென்றது. அங்கு அவரது மனைவி மற்றும் பிள்ளைகளிடம் சடலம் கையளிக்கப்பட்டது.

சடலத்தைப் பொறுப்பேற்ற அவர்கள் கதறி அழுதனர். அங்கு குழுமியிருந்த ஹேமச்சந்திரவின் உறவினர்களும் கதறினர். அவர்களுடன் இணைந்து நீதிபதி இளஞ்செழியனும் துக்கம் தாளாமல் அழுதார்.

அவரது சடலம் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டதை அறிந்த உறவினர்களும் ஊரவர்களும் ஏனையவர்களும் திரண்டு சென்று அஞ்சலி செலுத்தினர்.


உயிரிழந்த பொலிஸ் சார்ஜண்ட் ஹேமச்சந்திர 17 ஆண்டுகள் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப் பாதுகாவலராகப் பணியாற்றியவர்.

அவரது குடும்பம் கஷ்ட நிலைக்கு உட்பட்டது என்பதால் மரணக் கிரியைகள் அனைத்தும் நீதிபதி இளஞ்செழியனின் செலவிலேயே இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பொலிஸ் மீதான சூட்டுச் சம்பவத்துக்கு முதல்வர் விக்கி வன்மையான கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூரில் பொலிஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை வன்மையாகக்கண்டித்துள்ளார் வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த சனிக்கிழமை நல்லூரில்நடைபெற்றதாக்குதலின் போதுஉயிர் நீத்தபொலிஸ் சார்ஜண்ட்சரத்ஹேமசந்திரவின் மறைவு எம்அனைவரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. கடமையில் ஈடுபட்டிருந்த போது உயிர் நீத்தபொலிஸ் அலுவலரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேநேரத்தில், வன்செயல்களில் ஈடுபட்ட இளைஞர்களின் நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அருமந்தஓர் உயிரைப் பறித்தமையால் அன்னாரின் குடும்பம் பலவித இன்னல்களுக்கும் இடர்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி வந்துள்ளது. வன்முறையில் ஈடுபட்டவர்களின் உள்ளெண்ணம் பற்றித் தாம் ஆராய்ந்து வருவதாக வடமாகாண உப பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதல் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவருக்குப் பணித்துள்ளேன். – என்றுள்ளது.(உ)


யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் ஹேமச்சந்திர உயிரிழந்துள்ள நிலையில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த அவரது மனைவியிடம் நீதிபதி இளஞ்செழியன் அழுதவாறு காலில் வீழ்ந்து மன்னிப்புக் கோரும் காட்சி.

காலைக்கதிர் Kalaikkathir
சசிகா லேணர்ஸ்
THE SASIKA DRIVING SCHOOL
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
A/L எடுக்கும் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்
இந்தச் சிட்டையைப் பூர்த்தி செய்து வரும்
மாணவர்களுக்கு சாரதியப் பயிற்சிக்கு விசேட
கட்டணக் கழிவு வழங்கப்படும்.
பெயர் ........................................
முகவரி ........................................
........................................
தொ.பே.இல........................................






நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜண்ட் ஹேமச்சந்திரவின் சடலம் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து அவரது சொந்த ஊரான சிலாபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.